Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, வெஞ்சார நிலை வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 16 (02.10.2004) சனிக்கிழமை இதழ்: 02





நேற்றுப் பிற்பகல் ஜெனீவாவில் ஆரம்பமான சட்டநிபுணர்களுடனான கலந்துரையாடலுக்கு முன்னர் புலிகளின் பிரதிநிதிகள் அகவணக்கம் செலுத்துவதையும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சட்ட நிபுணர்களுடன் புலிகள் சுவிஸில் கலந்துரையாடல்!

## இன்றும் தொடர்ந்து நடைபெறும்

(ஜெனீவா)

**விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனை குறித்தும் சமாதான முயற்சிகளின் அடுத்தகட்ட நடவழக்கை குறித்தும் சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடல் நேற்றுப் பிற்பகல் சுவிற்சர்லாந்தில் ஆரம்பமானது.**

சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் விடுதி மண்டபம் ஒன்றில் தமிழீழ தேசியத் தலைவரின் படம் வைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் இலங்கை நேரப்படி பிற்பகல் 3.00 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமாகியது.

முதலில் தாயக விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும், கொல்லப்பட்ட மக்களுக்குமாக வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நீண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் நூல் வெளியீடு!

### இன்று சுவிஸில் நடைபெறும்

(ஜெனீவா)

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் சிறப்பு நூல் இன்று சுவிற்சர்லாந்தில் வெளியிடப்படவுள்ளது.

**'Prabhakaran A Leader for all Seasons'** - என்ற இந்த ஆங்கில மொழி நூலில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் ஏராளமான புகைப் படங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சுவிஸிலுள்ள ஹொட்டேல் பாரெனில் இன்று

(12 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளின் அரசியல் குழுவுடன் அன்ரன் பாலசிங்கம் இணைவு!

(ஜெனீவா)

சுவிற்சர்லாந்தில் நடைபெறவுள்ள அரசியலமைப்புக்குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வன்னியிலிருந்து சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான காலநிதி அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம் ஆகியோர் இணைந்துகொண்டனர்.

லண்டனிலிருந்து சென்ற அன்ரன் பாலசிங்கத்தை ஜெனீவா விமான நிலையத்தில் வைத்து அரசியற்துறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மன்னார் சூட்டுச் சம்பவத்துக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை!

### மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இனியவன்

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று - விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நாங்கள் அரசியற்பணிகளையும், சமூக சீரழிவுகளில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

மன்னார் பிரதான வீதியில் இரண்டு அலுவலகங்கள் இருக்கின்றன. இந்த அலுவலகங்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

இரவு 12.20 மணியளவில் - எங்களுடைய அலுவலகங்கள் மீது சரமாரியான கல்வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில், 40 க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர். இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது நாங்கள் பொறுமையைக் கடைப்பிடித்தோம்.

திட்டமிட்ட அளவில் காலத்துக்குக் காலம் இப்படியான சம்பவங்கள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**வாசக நேயர்களுக்கு!**

இன்றைய நமது ஈழநாடு பத்திரிகையுடன் வளநாடான் எழுதிய

காடு = நாடு

என்ற சிறுவர் சிறு நாடகநூல் இலவசமாக வழங்கப்படுகிறது.

உங்கள் முகவரிடம் தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்!

## இருவேறு சூட்டுச் சம்பவங்கள்; மட்டக்களப்பில் இருவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரசேத்தில் 28 வயதான இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

குடும்பிமலையைச் சேர்ந்த மூர்த்தி எனப்படும் புண்ணியசாமி தயானந்தமூர்த்தி என்ற இந்த இளைஞர் வாழைச்சேனை வைத்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் கலவரத்தை மன்னாரில் ஏற்படுத்த முயற்சி!

### பொலிஸ் ஊரடங்குச்சட்டம் அமுலில்

(மன்னார்)

மன்னார் மற்றும் பேசாலை பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து நேற்றுக்காலை முதல் மறுஅறிவித்தல்வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல் படு்தப்பட்டுள்ளது.

...லைமன்னார் வீதி கரிசலில் நேற்றுமுன்தினமிரவு 36 வயதுடைய முஸ்லிம் வியாபாரியான மொஹமது சலீம் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஏறபட்ட பதற்றநிலை காரணமாகவே வன்முறைகள் அங்கு இடம்பெற்றன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த எஸ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 2ம் லெப் மாலதி நினைவு நாள்

## 10.10.2004

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்




தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக் காட்டுகின்ற

- படைக்கலக் கண்காட்சி
- போர்க்கருவிகள் உற்பத்திச்சாலை
- விடியல் படைவீடு
- இராணுவ மருத்துவமனை
- சண்டைக் காட்சிகள்
- சிறப்புக் கலைநிகழ்வுகள்

வென்றிடுவீர் பரிசுகளை

பார்வையாளர்களுக்கான
- துப்பாக்கிச் சூட்டுப்போட்டிகள்
- தனி விளையாட்டுக்கள்

2ம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான மகளிர் உதைப்பந்தாட்ட போட்டிகள்

தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசைநிகழ்வுகள்

காலம்:- 06.10.2004 - 10.10.2004
நேரம்:- காலை 9.00 -இரவு 10.00 மணி
இடம்:- கிளிநொச்சி மத்திய மைதானம்.



# 50% விசேட கழிவு

2004, August

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு,

ஏதாவது சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறியில் → 50% கழிவுடன் சேரலாம்

ஏதாவது சிறுவர்களுக்கான கணனிப் பாடநெறியில் → 1000 ரூபா வுடன் சேரலாம்

இச்சலுகை 15 October 2004 வரை மட்டுமே

## புதிய ஆங்கில பாடநெறிகள்

சிறுவர்களுக்கு

- Pre-foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

இவ்வாரம் ஆரம்பம்




## பெற்றோர்களே !

உங்கள் குழந்தை 2+ முதல் 6 வயதுக்குட்பட்டவரா ? இதோ! அவரின் ஆங்கல மொழி அறிவை வளர்க்க அரியதோர் சந்தர்ப்பம்.

முற்றிலும் ஆங்கில மொழியில் ஆனால் தமிழ் மொழி ஓர் கட்டாய பாடமாக உள்ளடக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை நெறிகள்:

கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை

- **Play Group** (For Kids from 2+ to 3+ Years of age)
- **Montessori School** (For Kids from 3+ to 4+ Years of age)
- **Pre - School** (For Kids from 4+ to 5+ Years of age)

## English Elocution
Speech & Drama
கற்பிக்கப்படும்

இந்துமத சிறார்கள் 2005 க்கான அனுமதிகளை விஜயதசமியன்று பெற்றுக் கொள்ளலாம். கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதச் சிறார்கள் தமது அனுமதிகளை மார்கழி மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

| யாழ்ப்பாணம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 140, கோயில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. | 174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். |

TELEPHONE : 021-2225796

... சன நூலகம் யாழ்ப்பாணம்

# விடுதலைப் புலிகளை சந்திப்பதன் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும்!

## மகாநாயக்கர்களுக்கு சந்திரசேகரன் கடிதம்



(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஓர் உந்து சக்தியாக மல்வத்தபீட மகாநாயக்கருடனான சந்திப்பு அவசியமென விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், மல்வத்தபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவ ஸ்ரீ சுமங்கல தேரருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படவேண்டுமாயின் மல்வத்த பீட மகாநாயக்கர் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த வேண்டும். இதன்மூலம் பல பிரச்சினைகள் தீர்க்கப்படவாய்ப்புள்ளது. இரு தரப்பினரிடையேயும் புரிந்துணர்வு ஏற்படுவதற்கும் இந்தச் சந்திப்பு வாய்ப்பளிக்கும்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்கு முன்னர் அரச தரப்பினருடனான சந்திப்பை மல்வத்த பீடாதிபதி நடத்தலாம். பின்னர் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதன் மூலம் அவர்களது இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நட்டில் நிலவிய யுத்தம் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் இந்தச் சந்திப்பு பெரிதும் பயனாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்பை விரும்புகின்றனர். அதனால், மல்வத்த பீடாதிபதி இந்தச் சந்திப்புக்கு ஆவன செய்யவேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## ஊர்வலங்கள் நடத்த காத்தான்குடியில் தடை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தில் நடத்தப்படவிருந்த இரு ஊர்வலங்கள் மீது மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அஜ்மீர் ஹாஜா முயீனுத் தீன் சிக்த் கந்தூரியை முன்னிட்டு ஊர்வலம் ஒன்று நடத்தப்படவிருந்தது. இதேவேளை - காத்தான்குடி முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தாலும் ஊர்வலம் ஒன்று நடத்தப்படவிருந்தது.

இந்நிலையில் இருதரப்பினரும் ஊர்வலங்களை நடத்துவது பிரச்சினைகளை ஏற்படுத்துமென காத்தான்குடி ஜம்மியதுல் உலமா, பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து, இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்கு பொலிஸார் கொண்டு வந்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் - இந்த இரண்டு ஊர்வலங்களுக்கும் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

# பழுதடைந்த பாரம் தூக்கி 25 மில்லியனுக்கு கொள்வனவு

## 'ராவய' சிங்களப் பத்திரிகை திடுக்கிடும் தகவல்

பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கைக் கடற்படையினர் - டி.பி.ஜெயசிங்க கம்பனியிடமிருந்து வாங்கிய பழுதடைந்த பாரம்தூக்கி 25 மில்லியன் ரூபா பெறுமதியான தென, அரசாங்க விலை மதிப்பீட்டாளர் ஏச்.ஆர்.டி சில்வா மதிப்பீடு செய்துள்ளாரென கொழும்பின் சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

புதிய பாரம் தூக்கியொன்றின் உண்மையான பெறுமதி - 15 மில்லியன் ரூபாய்க்குள்ளேயே இருக்கும். ஆனால், இவர் இந்தப் பழுதடைந்த பாரம்தூக்கி 25 மில்லியன் பெறுமெனத் தெரிவித்து, அதன் விலை மதிப்பு ஆவணமான ஜி.எ.எம்- 2845 ஐ பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

உண்மையில் இந்தப் பாரம்தூக்கி ஒரு மாகாணத்தில் கொள்வனவு செய்யப்பட்டால், அந்த மாகாணத்திற்குரிய அரசாங்க விலை மதிப்பீட்டாளரே அதனை மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால், இந்தப் பாரம் தூக்கி விடயத்தில் அது நடைபெறவில்லை. இது கொழும்பிலுள்ள விலைமதிப்பீட்டு தலைமை அதிகாரி ஒருவரின் பணிப்பின்பேரிலேயே இந்த விலை மதிப்பீடு இடம்பெற்றுள்ளது.

தற்போது கடற்படையினரின் வெலிசற முகாமிலுள்ளதாகக் கூறப்படும் இந்தப் பாரம் தூக்கியை, அந்தப் பகுதியைச் சேர்ந்த விலை மதிப்பீட்டாளரே மதிப்பீடு செய்ய வேண்டும்.

முதற்தடவையாக இந்தப் பாரம் தூக்கியை மதிப்பீடு செய்து தருமாறு தன்னை பாதுகாப்பு அமைச்சு கோரியபோதும் தான் அதற்கு மறுப்புத் தெரிவித்ததாக கூறிய டி.சில்வா, இரண்டாம் முறை கேட்டபோது தான் சம்மதம் தெரிவித்ததாகவும், ஆனாலும் அவ்வேளை கடற்படையினர் தமது பாவனைக்கு அந்தப் பாரம் தூக்கியை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது கடற்படையால் பாவனைக்கு எடுக்கப்பட்டபோது 5 வருடங்கள் பாவனையில் ஈடுபடுத்தலாம் என்றே கூறப்பட்டது. ஆனால் தற்போது அந்தப்பாரம்தூக்கி பழுதடைந்திருப்பதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் பொருளாதாரத்தை சேது சமுத்திரத் திட்டம் பாதிக்கும்!

## அமைச்சர் சந்திரசிறிவிஜயசிங்க தெரிவிப்பு

இந்திய அரசு நடைமுறைப்படுத்தவுள்ள சேது சமுத்திரத் திட்டம்- இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்துமென, கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திர சிறி விஜயசிங்க தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ள சேது சமுத்திரத் திட்டத்துக்கு அமைய இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் - பாக்குநீரிணைப் பகுதி ஊடாக கப்பல் செல்லுவதற்கு வசதியாக ஆழப்படுத்தப்படவுள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் வரும் கப்பல்கள் இந்தத் திட்டத்தின் மூலம் குறுந்தூரத்தைப் பயன்படுத்துவதால், இரு துறைமுகங்களுக்கும் வருமானம் கிடைக்காது.

ஒரு நாட்டின் பொருளாதார செயற்திட்டம் - இன்னொரு நாட்டின் பொருளாதார செயற்திட்டத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற வகையில் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவத்தார். (01)

# பனிச்சங்கேணி தாக்குதல் புலிகளுக்கு இழப்பில்லை!

## ஜெயானந்தமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

வாகரைப் பிரதேசம் பனிச்சங்கேணியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் அவர்களுக்கு எத்தகைய இழப்புக்களும் ஏற்படவில்லை என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த புதனன்று வாகரை - பனிச்சங்கேணிப் பிரதேசத்துக்குச் சென்று திரும்பிய அவர், இந்தத் தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இராணுவத் தரப்பு தகவலை மேற்கோள்காட்டி சில ஊடகங்கள் ஊடாக குறிப்பிட்ட தாக்குதல் சம்பவத்தில் 7 விடுதலைப் புலிப் போராளிகள் உயிரிழந்ததாக செய்திகள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டன.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோது -

சம்பவத்தின்போது பாரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்தப் பிரதேச மக்களின் தகவலின்படி கிரிமிச்சை இராணுவ முகாம் பக்கமிருந்து எறிகணைகள் குடியிருப்புக்களில் விழுந்து வெடித்துள்ளது. இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை உணரக்குடியதாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஸ்தலத்திற்குச் சென்று நேரடியாக விசாரணைகளை மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலையங்களைப் பார்வையிட்ட பின்பு மோட்டார் தாக்குதலுக்கு இலக்கான மக்கள் குடியிருப்புக்களையும் சென்று பார்வையிட்டு, கிராம மக்களிடம் இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்களையும் பெற்றுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் சந்தித்து இந்தச் சம்பவம் தொடர்பாக அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

இது ஒருபுறமிருக்க, இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், இந்தச் சம்பவத்தில் குறிப்பிட்ட கிராமவாசிகளின் உயிரிழப்பு மற்றும் காயங்கள் தவிர வேறு எத்தகைய தகவலகளும் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# வெடிபொருட்களுடன் படகு மன்னார் கடற்பரப்பில் மீட்பு!

(மன்னார்)

மன்னார் பள்ளிக்குடா கடற்பரப்பில் அநாதரவான நிலையில் காணப்பட்ட பிளாஸ்ரிக் படகு ஒன்றிலிருந்து வெடிபொருட்கள், தொலைவிலிருந்து இயக்கும் கருவிகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அநாதரவாகத் தரித்து நின்ற படகைச் சோதனையிட்டபோது வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆறு கிலோகிராம் ஜெலிக்னைற் வெடிமருந்தும், 25 வெடிக்கவைக்கும் கருவிகளும் கைப்பற்றப்பட்டது. வெடிபொருட்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட பிளாஸ்ரிக் படகு மற்றும் வெடிபொருட்கள் கடற்படையால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

## உலக ஆசிரியர் தினத்தன்று

# 33 கோரிக்கைகளை முன்வைத்து கல்விசார் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

கல்விசார் ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு, அரசுக்கு அழுத்தம் கொடுக்க - உலக ஆசிரியர் தினத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த ஆசிரியர் சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் உலக ஆசிரியர் தினத்தின்போது, கொள்ளுப்பிட்டியில் உள்ள கல்வி ஊழியர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கம் இதற்கான முஸ்தீபுகளை எடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், ஏனைய 12 ஆசிரியர், கல்வி ஊழியர் தொழிற்சங்கங்களும் இணைந்து இதற்குப் பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

இது குறித்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் -

ஆசிரியர்கள் உள்ளடங்கலாக கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் துறையினரதும் பல தொழில் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில், அவற்றைத் தீர்க்கும் பொருட்டு, அரசை வற்புறுத்துவதே இந்தப் பேரணியின் நோக்கமாகும். இன்று அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய வகையில், உடனடியாக சம்பள உயர்வை வழங்கும்படி அரசை வற்புறுத்துவதும் இதன் மற்றொரு நோக்கமாகும்.

ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாத அதிகார வர்க்கத்தினர் - ஆசிரியர் தினத்தை பயன்படுத்தி, ஆசிரியர்களை முட்டாள்களாக்கும் தினமாக மாற்றுவதற்கே பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்களைப் புறம்தள்ளிவிட்டு, விடுமுறை எடுக்காதோரை சிறந்த ஆசிரியர் என முடிசூட்டுதல், மாணவர்கள் ஆசிரியர்களை வணங்கச் செய்தல் போன்ற போலி நடிப்புக்களை இந்தத் தினத்தில் நாம் பார்க்க முடியும் எனவும் அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 33 கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (04)

# மக்களிடம் பறித்த அடையாள அட்டைகளை ஜே.வி.பியினர் மீள ஒப்படைக்க வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

1989 ஆம் ஆண்டு மக்களிடம் இருந்து பறித்துச் சென்ற தேசிய அடையாள அட்டைகளை ஜே.வி.பி மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகோ விஜயரட்ன இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் -

ஜே.வி.பி.யினர் தாம் பறித்துச் சென்ற அடையாள அட்டைகளை திருப்பிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் அடையாள அட்டைகளை திரும்ப ஒப்படைத்தால் நாட்டில் தற்சமயம் சுமார் 30 சதவீத வாக்காளர்களுக்கு இல்லாமல் இருக்கும் அடையாள அட்டைகளின் ஒரு தொகுதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் உள்ள அனைத்து வாக்காளர்களும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு குறைந்தது 12 வருடங்களாவது செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வே 144 ஓட்டங்களால் பாகிஸ்தானிடம் தோல்வி கண்டது



பாகிஸ்தானில் நடைபெறும் முத்தரப்புத் தொடரில் பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன. இந்தத் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயைச் சந்தித்தது. நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தது.

பன்யங்கரா பந்துவீச்சில் யாசிர் ஹமீட் ஓட்டமெதுவும் பெறாமலும், பாசித் கான் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஹொண்டோவின் பந்துவீச்சில் சொகைப் மலிக், யுகானா ஆகியோர் தலா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதனால் 4 விக்கெட் இழப்புக்கு 36 ஓட்டங்களை எடுத்து தவித்த பாகிஸ்தான் அணியை கப்டன் இன்ஸமாம் காப்பாற்றினார். இவர் 74 ஓட்டங்களை எடுத்தார்.

இதற்குப் பிறகு அப்துல் ரஸாக், அப்ரிடி இணைந்து அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 114 பந்துகளில் 107 ஓட்டங்களை எடுத்த ரஸாக் ஒருநாள் போட்டிகளில் தனது இரண்டாவது சதத்தைப் பெற்றார்.

5 பவுண்டரி, 5 சிக்ஸர்களை விளாசிய இவர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அதிரடி ஆட்டத்தைக் கையாண்ட அப்ரிடி அதிவேகமாக அரைச்சதத்தை எட்டினார். 26 பந்துகளில் 58 ஓட்டங்களைக் குவித்த இவர் ஹொண்டோவின் பந்துவீச்சில் போல்டானார். இவரது ஸ்கோரில் 5 பவுண்டரி, 4 சிக்ஸர்கள் அடங்கும்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் இழப்புக்கு 292 ஓட்டங்களைக் குவித்தது. சிம்பாப்வே தரப்பில் ஹொண்டோ 3, பன்யங்கரா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



அடுத்து களமிறங்கிய சிம்பாப்வே அணியின் விக்கெட்டுக்கள் வழக்கம் போல் மளமளவெனச் சரிந்தன. ஓரளவுக்குத் தாக்குப்பிடித்து விளையாடிய சிபண்டா, அதிகபட்சமாக 57 ஓட்டங்களை எடுத்தார். இவர் சொகைப் மலிக் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

மேலும், இப்ராஹிம் 29 ஓட்டங்களை எடுத்தார். மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேற சிம்பாப்வே அணி 38.3 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் தரப்பில் சுழற்பந்து வீச்சில் அசத்திய அப்ரிடி, மலிக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# இந்திய கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக ரன்பீர்சிங்



இந்திய கிரிக்கெட் சபையின் 75 ஆவது ஆண்டு கூட்டம் கொல்கொத்தாவில் நடந்தது. பரபரப்பான முறையில் நடந்த இந்தக் கூட்டத்தின் முடிவில் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவுசெய்யப்பட்டார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மத்திய அமைச்சர் சரத் பவார் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். புதிய தலைவர் மகேந்திராவின் தலைமையில் ஏனைய நிர்வாகிகள் நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்திய அணியைத் தேர்வுசெய்வதற்கான தேர்வுக்குழுவில் அநேக மாற்றங்கள் செய்யப்பட்டன. தற்போதைய தலைவர் கிர்மானியின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து முன்னாள் விக்கெட் கீப்பா கிரண் மோரே தேர்வுக்குழுவின் புதிய தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார்.

2 ஆண்டு காலம் பதவி நிறைவு பெற்றதையடுத்து கீர்த்தி ஆசாத், சஞ்சய் ஜக்தாலே ஆகியோரும் மாற்றப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக யஷ்பால் சர்மா (வடக்கு), கோபால் ஷர்மா (மத்திய மண்டலம்) ஆகியோர் ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தென்மண்டலத்தைச் சேர்ந்த கிர்மானியின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து, சென்னையைச் சேர்ந்த வி.பி.சந்திரசேகர் தேர்வுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இன்னொரு உறுப்பினராக பிரணாப்ராய் தொடர்ந்து பதவியில் இருக்கிறார். இவரின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் ஒரு வருடம் உள்ளது.




## வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் - 2004 பதக்கப் பட்டியல்

ஏதென்ஸ் நகரில் நடைபெற்றுவரும் வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற நாடுகள் விபரம் :

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 63 | 46 | 32 | 141 |
| பிரித்தானியா | 35 | 30 | 29 | 94 |
| கனடா | 28 | 19 | 25 | 72 |
| அமெரிக்கா | 27 | 22 | 39 | 88 |
| அவுஸ்ரேலியா | 26 | 38 | 36 | 100 |
| உக்ரேயின் | 24 | 12 | 19 | 55 |
| ஸ்பெயின் | 20 | 27 | 24 | 71 |
| ஜேர்மனி | 19 | 28 | 32 | 79 |
| பிரான்ஸ் | 18 | 26 | 30 | 74 |
| ஜப்பான் | 17 | 15 | 20 | 52 |
| ரஷ்யா | 16 | 08 | 17 | 41 |
| செக்குடியரசு | 16 | 08 | 07 | 31 |
| தென்னாபிரிக்கா | 15 | 13 | 07 | 35 |
| பிரேசில் | 14 | 12 | 07 | 33 |
| மெக்ஸிக்கோ | 14 | 10 | 10 | 34 |
| கொரியா | 11 | 11 | 06 | 28 |
| ஹொங்கொங் | 11 | 07 | 01 | 19 |
| போலந்து | 10 | 25 | 19 | 54 |
| பெலாரஸ் | 10 | 12 | 07 | 29 |
| ஒஸ்ரியா | 08 | 11 | 04 | 23 |
| சுவீடன் | 08 | 07 | 06 | 21 |
| டுனீசியா | 08 | 07 | 03 | 18 |
| ஈரான் | 07 | 03 | 13 | 23 |
| எகிப்து | 06 | 09 | 08 | 23 |
| அல்ஜீரியா | 06 | 02 | 05 | 13 |
| நியூஸிலாந்து | 06 | 01 | 03 | 10 |
| நெதர்லாந்து | 05 | 11 | 12 | 28 |
| நைஜீரியா | 05 | 04 | 03 | 12 |
| டென்மார்க் | 05 | 03 | 07 | 15 |
| ஸ்லோவாக்கியா | 05 | 03 | 04 | 12 |
| இத்தாலி | 04 | 08 | 07 | 19 |
| இஸ்ரேல் | 04 | 04 | 05 | 13 |
| பின்லாந்து | 04 | 01 | 03 | 08 |
| கிரீஸ் | 03 | 13 | 04 | 20 |
| தாய்லாந்து | 03 | 06 | 06 | 15 |
| பெல்ஜியம் | 03 | 02 | 02 | 07 |
| கென்யா | 03 | 01 | 03 | 07 |
| நோர்வே | 03 | 01 | 01 | 05 |
| அங்கோலா | 03 | 00 | 00 | 03 |
| சுவிற்சர்லாந்து | 02 | 06 | 08 | 16 |
| போர்த்துக்கல் | 02 | 05 | 05 | 12 |
| மொரோக்கோ | 02 | 04 | 00 | 06 |
| கியூபா | 02 | 02 | 07 | 11 |
| சைனீஸ் தாய்ப்பே | 02 | 02 | 02 | 06 |
| அசர்பைஜான் | 02 | 01 | 01 | 04 |
| ஹங்கேரி | 01 | 08 | 09 | 18 |
| ஐஸ்லாந்து | 01 | 03 | 00 | 04 |
| குவைத் | 01 | 02 | 03 | 06 |
| ஸ்லோவேனியா | 01 | 02 | 01 | 04 |
| லிதுவேனியா | 01 | 01 | 05 | 07 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 01 | 01 | 02 | 04 |
| லத்வியா | 01 | 01 | 01 | 03 |
| இந்தியா | 01 | 00 | 01 | 02 |
| ஜமேக்கா | 01 | 00 | 01 | 02 |
| துருக்கி | 01 | 00 | 01 | 02 |
| பொஸ்னியா | 01 | 00 | 00 | 01 |

# அவுஸ்ரேலியாவுடனான முதல் டெஸ்ட்: 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிப்பு

அவுஸ்ரேலியாவுடன் பெங்களூரில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவுள்ள 15 பேர் கொண்ட இந்திய அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில சச்சின் டெண்டுல்கரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதில் வேகப்பந்து வீச்சாளர் அசிஷ் நெஹ்ராவுக்குப் பதிலாக சுகவீனம் காரணமாக அண்மைக் காலமாக இந்திய அணியில் இடம்பிடிக்காதிருந்த சகீர்கான் இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஷேவாக், யுவராஜ்சிங் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக இந்த இருவரும் மோசமான முறையில் விளையாடி வந்தாலும், நடைபெற்று முடிந்த இந்திய ஏ அணியுடனான போட்டியிலும் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கி தமக்கிடையே 279 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

இதில் ஷேவாக் 9 சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 146 ஓட்டங்களையும், யுவராஜ் 115 ஓட்டங்களையும் பெற்றனர். ஆனாலும் ராவிட் 09, லக்ஷ்மன் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

அத்துடன் பார்த்தீவ் பட்டேல் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் இந்திய சீனியர் அணி 5 விக்கெட்டுக்களால் இந்திய ஏ அணியைத் தோற்கடித்தது.

இதேவேளை இந்திய ஏ அணியில் விளையாடிய முகமட் கைஃவ் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றார். இவரும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 வருடங்களாக இவர் அணியில் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணி விபரம் வருமாறு -

கங்கூலி (அணித்தலைவர்), ஷேவாக், ஆகாஷ் சோப்ரா, ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன், யுவராஜ்சிங், மொகமட் கைஃவ், பார்த்தீவ் பட்டேல் (விக்கெட் கீப்பர்), அனில் கும்ப்ளே, ஹர்பஜன்சிங், சகீர்கான், இர்பான் பதான், அஜித் அ்கர்கர், முரளி கார்த்திக்.

இதேவேளை, இந்தியாவுக்கெதிரான முதல் 3 டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலிய அணிக் கப்டன் ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

## தாய் ஓபன் ரெனிஸ் காலிறுதியில் சபின்



தாய் ஓபன் ரெனிஸ் போட்டியில் ரஷ்யாவின் மாரட் சபின் காலிறுதிக்கு முன்னேறினார்.

ஹொங்கொங்கில் ஏ.டி.பி அந்தஸ்து பெற்ற தாய் ஓபன் ரெனிஸ் போட்டி நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப்போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன. உலகின் முன்னாள் முதல்நிலை வீரரான ரஷ்யாவின் மாரட் சபின், செக்குடியரசின் ஜெர்ரி வனெக்கை எதிர்த்து விளையாடினார்.

இதில் சபின் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

# ரெனிஸ் போட்டிகளில் பங்கேற்க மீண்டும் வருகிறார் கிம் கிளைஸ்டர்ஸ்



ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சர்வதேச ரெனிஸ் அரங்குக்கு வருகிறார் கிம் கிளைஸ்டர்ஸ்.

பெல்ஜிய வீராங்கனையான கிம் கிளைஸ்டர்ஸ் ரெனிஸ் தரவரிசையில் முதல் இடம் வகித்தவர். இடது கை மணிக்கட்டில் காயம் காரணமாக மே மாதம் முதல் இவர் போட்டிகளில் பங்கேற்கவில்லை. இதன் காரணமாக தரவரிசையில் ஏழாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

காயம் தற்போது முழுமையாகக் குணமாகி விட்ட நிலையில் அவர் மீண்டும் களமிறங்குகிறார். இவ்வார இறுதியில் பெல்ஜியம் ஓபன் ரெனிஸ் தொடர் நடக்கிறது. ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்தத் தொடரில் திறமை காட்டப்போகிறார். இந்தத் தகவலை கிம் கிளைஸ்டர்சின் செய்தித்தொடர்பாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

# கொரிய பெண்கள் ரெனிஸ்; காலிறுதிக்குள் ஷரபோவா!



கொரியாவில் நடந்துவரும் பெண்களுக்கான சர்வதேச ரெனிஸ போட்டியின் காலிறுதிக்கு மரியா ஷரபோவா முன்னேறியுள்ளார்.

பெண்களுக்கான சர்வதேச ரெனிஸ் போட்டி கொரியாவில் நடந்துவருகிறது. இந்தப் போட்டிக்கான நேற்றுமுன்தின ஆட்டத்தின் முன்னணி வீராங்கனை மரியா ஷரபோவா - மிகோ சாக்கி (ஜப்பான்) ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

தற்போதைய விம்பிள்டன் சம்பியனான ஷரபோவா இந்தப் போட்டியில் எந்தவிதமான நெருக்கடியையும் சந்திக்கவில்லை.

முடிவில் அவர் 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியையடுத்து ஷரபோவா காலிறுதிக்கு முன்னேறினார்.

காலிறுதியில் ஷரபோவா - ஸ்டவுசர் ஆகியோர் மோதவுள்ளனர். இந்த ஆண்டில் இருவரும் மோதிய போட்டியில் ஷரபோவா தோல்விகண்டார். இதற்குப் பதிலடி கொடுக்க ஷரபோவாவுக்கு தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது.

# ஒட்டகச்சிவிங்கி

மிருகங்கள் எங்களுடன் கதைக் காவிட்டாலும், தமக்குள் ஏதோ ஒரு சத்தத்தின் மூலம் அல்லது ஒலி எழுப்பிப் பேசிக்கொள்கின்றன.

ஆனால, ஒட்டகச்சிவிங்கியால் தனது வாயின் மூலம் எந்த ஒலியையும் எழுப்ப முடியாது.

இதற்கு மிக நீண்டகழுத்து உண்டு. எலிக்கு இருப்பதுபோலவே இதற்கும் கழுத்தில் 7 எலும்புகள் உள்ளன. அத்துடன் இவற்றுக்குச் சில நிறங்களைப் பிரித்தறியத் தெரியாது. பச்சை, மஞ்சள், செம்மஞ்சள் போன்ற நிறங்களை அது குழப்பிக் கொள்ளும். ஆனால் ஏனைய நிறங்களை சிரமமில்லாமல் கண்டுகொள்ளும்.

ஒட்டகச்சிவிங்கியின் உடலிலுள்ள புள்ளிகள் மனிதர்களின் கைரேகைகளைப் போல் தனித்துவமானவை.

எந்த ஒட்டகச்சிவிங்கிக்கும் ஒரே மாதிரியான வகையில் ஒரே இடத்தில் புள்ளிகள் இருக்காது.

# குட்டி நாய்

குட்டி நாய் குளிருக்குள்ள
படுத்துக் கிடக்குதே
கூட்டிக் கிடக்க அம்மா
நாயைக் காணவில்லையே?

குட்டி நாயின் வயிறும் இங்கே ஒட்டிக்
கிடக்குதே
ரொட்டித் துண்டு வேண்டுமென்று ஏறி
இறங்குதே!

அம்மா நாயைக் காணவில்லை, எங்கு
சென்றதோ?
அடைமழைக்கு கூடு தேடி
புகட்டடுப்புப் பக்கம் போனதோ?

புகட்டடுப்பில் வைத்திருந்த
மீதம் கண்டதே...?
வாய் நிறையக் கௌவிக் கொண்டு ஓடி
வந்ததே?

குட்டி நாயும் குதித்து
ஓடிப் பறித்துத் தின்றதே!
குளிரும் போச்சு... பசியும் போச்சு...
பாசம் காட்டி

தாயின் மீது ஏறிக் குதித்து
விளையாடி மகிழ்ந்ததே!
தரையின் மீது வெயில் காய
குளிரும் ஆவியானதே

# சித்திரக் கதை

## கெட்டிக்காரத் தவளை

வளையத்தை உருட்டி விளையாடியது தவளை.



கொக்கைக் கண்டவுடன் யோசித்தது.



கொக்கின் வாய்க்குள் வளையத்தைத் கொடுத்தது.



நீருக்குள் பாய்ந்து தப்பியது.



# எனது அம்மா

எனது அம்மாவின் பெயர் தி.பூபதி யம்மா.
அம்மாவை நான் கண்கண்ட தெய்வமாக வழிபடுகிறேன்.
எனது அம்மா மீது எனக்குக் கொள்ளை பிரியம்.
என் அம்மா மிக நல்லவர்.
அம்மா எனக்கு உணவு ஊட்டுவார்.

தி.ஜெனத்குமாரன்
தரம் 6
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# பக்றீரியாவும் உணவும்

பக்றீரியாக்கள் இல்லையென்றால் உணவுப் பொருட்கள் பழுதடையாமல், நீண்ட நாட்களுக்கு அப்படியே இருக்கும். எல்லாவித உணவுகளையும் பதப்படுத்தும் முறைகளும் பக்றீரியா வைக் கொல்வதற்கோ அல்லது அதன் வளர்ச்சியைத் தடுப்பதற்கோ உதவுவதாகும்.

உதாரணமாக - காய வைப்பதால் பொருட்களின் ஈரப்பதன் குறைகின்றது, பக்றீரியா கொல்லப்படுகின்றது. உணவுப் பொருட்களைக் குளிர்ச்சி அடைய வைப்பதால், பக்றீரியா கொல்லப்படுவதில்லை.

ஆனால், அதன் வளர்ச்சி நிறுத்தப் படுகிறது. வெப்பமேற்றுவதால், பக்றீரியா முழுவதுமாக அழிக்கப்படுகிறது. நிரந்தரமாக அவை அழிக்கப்படுவதில்லை.

சமைக்கப்படாத உணவைப்போலவே, சாப்பிடாமலும் - பக்குவப்படுத்தப் படாமலும் வைத்திருக்கும் சமைத்த உணவுகளும் விரைவிலேயே பழுதடைந்து விடும்.

# விடுகதைகள்

1. தாய் வெளியிலே, மகள் வீட்டிலே. தாய் மாட்டுக்கு உணவானாள், மகள் மனிதனுக்கு உணவானாள். இவை என்ன?
2. இவன் சேரும்போது சேர்ந்ததைப் பிரிப்பான். இவன் யார்?
3. எண்ணெய் வேண்டாத விளக்கு, எடுப்பார் கைவிளக்கு. கண்ணீர் விட்டுக் கலங்கிடும் விளக்கு, தன்னைத்தானே விழுங்கிடும் விளக்கு. அது என்ன?
4. காசு போல் இலை இருக்கும். கவரிமான் பூப்பூக்கும். தின்னக் காய் காய்க்கும். தின்னாத பழம் கொடுக்கும். எது என்ன? (விடை அடுத்த வாரம்)

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு!**
இன்சொல் இரும்புக் கதவையும் திறக்கும்.



# சிறுவர் அரங்கம்

# சூரியனைத் தொலைத்த கன்றுக்குட்டியார்



காலைச் சூரியன் தனது கதகதப்பான கதிர்களைப் பரப்பிக் காலை நேரத்துக் கடமையை ஆரம்பித்திருந்தான். அதிகாலை நேரம் பனியில் குளித்திருந்த பசும் புற்களின் மேலும், மலர்ந்திருந்த அழகான பூக்களின் மேலும் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறித்துக் கண்களைக் கூசச் செய்தன.

கழுத்திலே கட்டியிருந்த மணி டிங், டிங் என்று ஒலி எழும்ப, பச்சைப் புறதரைக்கு குதித்து ஓடி வந்தார் கன்றுக் குட்டியார்.

ஆகா, எவ்வளவு அழகான காலைப்பொழுது. குளிருக்கு இதமான கத கதப்பான சூரியக்கதிர்கள் என்று சொல்லிக் கொண்டார் கன்றுக் குட்டியார்.

அழகான அந்தக் காலைப் பொழுதிலே, இதமான சூரிய ஒளியிலே மென்மையான பச்சைப் புற்தரையில் வசதியாகப் படுத்துக் கொண்டு இளைப்பாறினார் கன்றுக்குட்டியார்.

சூரியனே, சூரியனே இவ்வளவு இனிமையான நீதான் எனது அருமை நண்பன் என்று சூரியனைப் பார்த்துச் சொன்னார் கன்றுக் குட்டியார். அன்றைய காலைப்பொழுது முழுவதையும் பச்சைப் புற்தரையிலேயே இனிமையாகக் கழித்தார் கன்றுக்குட்டியார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்துவிட்ட கன்றுக் குட்டியார் - இனிமையான சூரிய நண்பனைச் சந்திக்க பச்சைப்புற்தரைக்கு ஓடிவந்தார். பச்சைப் புற்தரையிலே நின்றுகொண்டு வானத்திலே சூரியனைத் தேடிய கன்றுக் குட்டியாருக்குப் பலத்த ஏமாற்றம்.

வானத்திலே சூரியனைக் காணவில்லை. கருமையான முகில்கள் சூழ்ந்த வானம் இருண்டு கிடந்தது. குளிர்ந்த காற்று சில்லென்று வீசியது. பலத்த மழை பெய்யப்போவதற்கான அறிகுறிகள் வானில் தென்பட்டன.

வானிலே சூரியனைக் காணாததால் கன்றுக்குட்டியார் மிகவும் கவலையடைந்தார். இருண்டு, வானை மூடிக்கிடந்த முகில்கள்தான், அவரது அருமை நண்பனான சூரியனை மறைத்துவிட்டன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

ஐயோ! அருமையான எனது நண்பனைத் தொலைத்து விட்டேனே என்று சொல்லிக்கொண்டே, குதித்து ஓடித் தொலைந்த சூரியனைத் தேடினார்.

நண்பனைத் தேடித்தேடிக் களைத்துப் போன கன்றுக் குட்டியார் - நாளைக்கு சூரியன் நிச்சயமாக வருவான் என்று சொல்லிக்கொண்டு வீடு திரும்பினார்.

மறுநாள் காலையிலும் அதே நிலைமைதான். வானத்தை மூடியிருந்த கருமுகில்கள் இன்னும் விலகிய பாடில்லை. வானம் இருண்டிருந்தது. இலேசான மழைத்தூறல் விழுந்தது. வானத்திலே சூரியனைக் காண வில்லை. பச்சைப் புற்தரைக்கு வந்த கன்றுக்குட்டியார் - வானத்தில் இன்றைக்கும் சூரிய னைக் காணாததால், கவலை மிகக்கொண்டார்.

கண்களிலே கண்ணீர் பெருகிட, ஓவென்று உரத்த குரலிலே அழுதார். அழுகையின் நடுவிலும் அடிக்கடி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார்.

எவ்வளவுதான் அழுதபோதிலும், பலன் எதுவுமில்லை. சூரியனைக் காணவில்லை. அருமையான எனது சூரிய நண்பனைத் தொலைத்துவிட்டேனே என்று சொல்லி -விக்கி, விக்கி அழுதார் கன்றுக்குட்டியார்.

சிறிது நேரம் கழிந்தது. அழுது முடித்த கன்றுக்குட்டியார் இறுதியாய் ஒரு முடிவுக்கு வந்தார். தொலைந்துபோன சூரிய நண்பனைத் தேடிப் பயணப்படுவதே அவரது முடிவாகும்.

வீட்டை மறந்து, பசியையும் நினைக்காது - அருமையான தனது சூரிய நண்பனைத் தேடிப் பயணத்தைத் தொடங்கினார் கன்றுக்குட்டியார்.

காட்டிலே நடந்து நடந்து கால்கள் வலித்தன. பசி வயிற்றைக் கிள்ளியது. எனினும், சூரியனைத் தேடும் வேலையை ஒரு நிமிடம் தானும் தள்ளிப் போட்டிடக் கன்றுக் குட்டியார் விரும்பவில்லை. பாதையோரமாய் இருந்ததொரு வீட்டின் அருகே சென்று கதவைத் தட்டினார் கன்றுக்குட்டியார். வீட்டில் யாராவது இருக்கிறீர்களா? என்று குரல் கொடுத்தார்.

ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார் ஒரு குட்டி முயலார். வெளியில் நின்ற கன்றுக்குட்டியாரைக் கண்ட முயல்குட்டியார் - கன்றுக்குட்டியாரே! கன்றுக்குட்டியாரே எந்தன் வீட்டுக் கதவை நீர் தட்டியதன் காரணம் என்னவோ? என்று அன்போடு கேட்டார்.

(தொடரும்...)

- யோ.சத்யன்

# இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- உ.மதுவண்ணன்
பாடசாலை:- நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள்:- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர் :- தே.சங்கவி
பாடசாலை :- வதிரி திருஇருதயக் கல்லூரி
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள்:- விளையாட்டு, ஓவியம் வரைதல்

பெயர் :- ப.ரூபலவன்
பாடசாலை:- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:- விளையாட்டுத்துறை.

பெயர் :- சி.சிந்துஷன்
பாடசாலை :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:- கதைப்புத்தகம் வாசித்தல்,

பெயர் :- மு.நிவிதா
பாடசாலை :- மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள்:- விளையாட்டு, நடனம்.

பெயர் :- சு.விதுஷன்
பாடசாலை :- பரியோவான் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:- துடுப்பாட்டம், விளையாட்டு, கதைப்புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர் :- ந.பவதுர்சன்
பாடசாலை :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:- ஓவியம் வரைதல், கண்டு பிடிப்புகளில் ஈடுபடல்.

## வண்ணத்துப்பூச்சி வண்ணப்பூக்களை அடைய வாழி காட்டுங்கள்



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

'இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்,
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் ..........................................
கற்கும் பாடசாலை ..........................................
கற்கும் தரம் ..........................................
வீட்டு முகவரி ..........................................
பிறந்த திகதி ..........................................
ஆர்வமுள்ள துறைகள் ..........................................
..........................................
..........................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

ஜீவகாருண்யம் என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஜீவகாருண்யம் என்றால், உயிரினங்களிடம் காட்டப்படும் இரக்கம் என்பதேயாகும்.

எங்களைச் சுற்றி எத்தனையோ சிறுபிராணிகள் வாழுகின்றன. தும்பி, வண்ணத்துப்பூச்சி, எறும்புகள், பூனைக்குட்டி, வண்டுகள், நாய்க்குட்டி போன்றவையே இந்தச் சிறு பிராணிகள். நாங்கள் வைக்கும் உணவை உண்டுவாழும் சிறு பிராணிகளும் இருக்கின்றன.

சிறுவர்களாகிய நீங்கள், சிலநேரங்களில் இவற்றைப் பிடித்து, சிறகுகள், காதுகளை முறுக்குவது, கல்லால் அடிப்பது, நூலால் கட்டி விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபடுகிறீர்கள். அவை வேதனைப்படுவதைப் பார்த்து ரசிக்கிறீர்கள்.

உங்களை யாராவது அடித்தால், காதை முறுக்கினால், எப்படி வலிக்குமோ, அப்படித்தானே அந்தப் பிராணிகளுக்கும் வலிக்கும். இனிமேல், உங்களைச் சுற்றி இருக்கும், உங்கள் வீட்டுத் தோட்டத்துக்கு வரும் சிறு பிராணிகளை வதைக்காமால் அவற்றை இரக்கத்து டனும், அன்புடனும் நடத்துங்கள்.

பாசமுடன் – சாரு அக்கா

# முளைக்கு வேலை

கீழ்க்காணும் எண்கள் பொம்மைகளின் விலைகளைக் குறிக்கின்றன. விலைகளுக்கு ஏற்றபடி இரு விபாபாரிகள் பொம்மைகளை இவ்வாறு சதுர வடிவில் அடுக்கி வைத்துள்ளனர். அவர்கள் எதனை மனதிற்கொண்டு இவ்வாறு அடுக்கி வைத்துள்ளனர்?

படம் 1

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 1 | 8 | 9 | 14 |
| 3 | | | | 2 |
| 6 | | | | 7 |
| 12 | | | | 10 |
| 11 | 4 | 5 | 13 | 15 |

படம் 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | 4 | 5 | 12 | 13 | 17 |
| 2 | | | | | 3 |
| 2 | | | | | 8 |
| 11 | | | | | 10 |
| 15 | | | | | 14 |
| 16 | 1 | 6 | 9 | 20 | 18 |

## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1) குதிரைப் பொம்மையின் விலை -
ரூ 50 - 20 = 30
2) கடைசிப் பொம்மையைத் தட்டுடன் கொடுத்துவிட வேண்டும்.
3) சந்திரனில் காற்று இல்லாததால், ஆசிரியர் பேசிய சொற்கள் எதுவும் அவர்களின் செவிக்கு எட்டியிருக் காது. எனவே பாடம் புரிந்திருக்காது.

# உங்கள் கைவண்ணம்



வே.பார்த்திபன்
தரம் - 8
பளை மத்திய கல்லூரி



தி.ஜெனத்குமரன்
தரம் - 6
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# கடல் வெள்ளரி



கடலில் வாழும் பிராணிகளில் ஒன்று கடல் வெள்ளரி. நட்சத்திர மீன், கடல் முள்ளெலி, கடல் லில்லி போன்றவை கடல் வெள்ளரி வகையைச் சேர்ந்தவையாகும்.

கடல் வெள்ளரியின் உடல் நீண்டு, உருண்டு பார்ப்பதற்கு வெள்ளரிக் காய் போல் இருக்கும். உடலைச் சுற்றி தடித்த ஓடு இருக்கும். உடலின் மேல்பகுதியில் வாய் இருக்கும். இந்த வாயைச் சுற்றி ஓம் வட்டமாகக் கொம்புகள் வளர்ந்து இருக்கும். ஒவ்வொரு கொம்பும் சிறு மரம் போல் பல கிளைகளுடன் காணப்படும். இந்தக் கொம்புகளை நீட்டியும், சுருக்கியும் கடல் வெள்ளரி இரை பிடிக்கும்.

கடல் வெள்ளரியில் ஏறக்குறைய 1150 இனங்கள் உள்ளன. இவை எல்லாக் கடல்களிலும் வாழுகின்றன. கடலின் ஆழத்தில் மண், சகதிகளில் சில இனங்கள் வசிக்கின்றன. மேலும் பல இனங்கள் பவளப்பாறை, பாறைகளில் வாழுகின்றன.

மண், பாறைகளுக்கு ஏற்றவாறு எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி உடலின் நிறத்தைப் பெற்றிருக்கின்றன, கடல் வெள்ளரிகள். இதனால் இவை எதிரிகளின் கண்களிலிருந்து சுலபமாகத் தப்பிவிடுகின்றன.

கடலில் இருக்கும் சின்னஞ்சிறு உயிர்களே கடல் வெள்ளரியின் உணவு. இவை கடலிலுள்ள அழுக்குகளை உண்டு கடலைச் சுத்தம் செய்கின்றன.

எதிரிகள் கடல் வெள்ளரியைப் பிடிக்கவரும்போது தன் வயிற்றிலுள்ள குடற்பகுதியை வெளியே தள்ளி எதிரிகளை ஏமாற்றி விட்டு, தப்பிச் செல்லும். மீண்டும் புதிதாக குடற்பகுதி வளரும்.

மிகச் சிறிய அளவிலிருந்து 2, 3 அடி நீளம்வரைகூட கடல் வெள்ளரிகள் வளரும். இவை இடம்விட்டு இடம் செல்லக்கூடியவை. ஆனால் மிகவும் மெதுவாகவே செல்லும்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு

# மானிப்பாய் பொதுநூலகங்களின் கடமை நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் - உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் இயங்கும் பொதுநூலகங்களில் இந்த மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது நூலகங்களின் கடமை நேரம் மாலை 6 மணியிலிருந்து 9 மணி வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் அந்தந்தப் பொறுப்பதிகாரிகள் ஊடாக பொது நூலகங்களின் நூலகர்களுக்கு அறிவித்துள்ளார்.

எனவே, அன்றைய தினங்களில் பதில் நூலக சேவகர் மற்றும் நூலகத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, நூலக வாசிப்புத் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கத் தாங்களும் விளம்பரம் செய்து, தேசிய வாசிப்பு மாதத்தை சுபீட்சமாக்கி, விழிப்புணர்வு அடையச் செய்யும்படி பிரதேசசபை செயலாளர் கேட்டுள்ளார்.

மேலும் இக்காலப் பகுதியில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நூலகப்பகுதி உத்தியோகத்தர்கள் ஒக்ரோபர்மாத காலப் பகுதியில் வீடு வீடாகச் சென்று நூல்களைச் சேகரித்து உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (100)



பருத்தித்துறை பிரதேச செயலர் சு.வசந்தகுமார் பயனாளி ஒருவருக்குக் கடன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## கவிதை நூல் வெளியீட்டுவிழா

பழம்பெரும் கவிஞராகிய பாசையூர் மு.சிங்கராயர் ஆக்கிய 'மடு அன்னை பிள்ளைத் தமிழ்' எனும் கவிதை நூலின் வெளியீடு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத்துறை, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருட்கலாநிதி எஸ்.வி.பி.மங்களராஜா அடிகளார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நயப்புரையையும், கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆய்வுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (206)

# சமாதானமும் அபிவிருத்திக்குமான ஆய்வுப் பயிற்சியின் கற்கைநெறி!

(யாழ்ப்பாணம்)

நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழக சமூகவியல், புவியியற் துறையும், நோர்வே விவசாயப் பல்கலைக்கழகமும், யாழ் - பல்கலைக்கழகத்துடன் இணைந்து 'சமாதானமும் அபிவிருத்திக்குமான கற்கை: கோளம் தழுவிய உள்ளூர் அபிவிருத்தி'' என்னும் பொருளில் ஒருவாரகால ஆய்வுப் பயிற்சிநெறி ஒன்றை நவம்பர் நடுப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையில் நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

இந்தப் பயிற்சியானது நவம்பர் 14 முதல் 18 வரை புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். 40 பேர் இந்தப் பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

பயிற்சி முடிவில் இவர்களுக்கான சான்றிதழ்களை நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழகம் வழங்கும்.

இந்தக் கற்கைநெறிக்கான விரிவுரைகள் - ஒஸ்லோ பல்கலைக்கழக சமூகவியல், புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கிறிஸ்தியன் ஸ்ரொக்கே, பேராசிரியர் என்.சண்முகரட்ணம், யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் பி.பா.சுந்தரம்பிள்ளை ஆகியோரால் நடத்தப்படும்.

நோர்வே நாட்டினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற ஈழத்தமிழர்களுக்கான உதவியில் இதுவும் ஒன்று. இத்தகைய புலமை சார்ந்த கற்கைநெறி எமது பிரதேச துறை சார்ந்த ஆளணி வள விருத்திக்குப் பேருதவியாக அமையும் என கலாநிதி சூசை.ஆனந்தன் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியில்

# ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கம் செய்துள்ள ஆசிரியர்களுக்கான விசேட ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, அதன் தலைவர் ச.சற்குருநாதன் தெரிவித்தார்.

ஐந்து கல்வி வலயங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 ஆசிரியர்களுக்கு வீதி ஒழுங்கு நடைமுறைகள், பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான விரிவான கருத்தரங்கு நடைபெறும் எனவும்,

கருத்தரங்கின் இறுதியில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

# வலிகாமம் கலாசாரப் பேரவையின் கலாசார விழா இன்று ஆரம்பம்!

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை மல்லாகம், தெல்லிப்பளை, கட்டுவன், வசாவிளான் மற்றும் மீளக் குடியமராத பிரதேசங்களை இணைத்து நடாத்தும் கலாசார விழா இன்றும், நாளையும் வலி. வடக்கு பிரதேச செயலக வசந்த கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு கலாசாரப் பேரவை உப வலயம் - 2 இன் தலைவர் வ.வைரவிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள முதலாம்நாள் நிகழ்வுகளில் - பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலர் சு. முரளிதரன், தெல்லிப்பளை காசி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு. சி.கணேசலிங்கக் குருக்கள், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், தொழிலதிபர் ஏ.வீ.ஆனந்தன், இலங்கை வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் க.சிவபாலன், வலி.வடக்கு பிரதேசசபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னதாக, மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்திலிருந்து பண்பாட்டு ஊர்வலமொன்று விழா மண்டபவம் வரையும் நடைபெறும். முதலாம் நாள் கலை நிகழ்வுகளாக - தனி நடனம், கதம்ப நிகழ்வு, தனியிசை, சிறுவர் நாடகம், கிராமியப் பாடல், காவடி, குழு இசை, 'நெஞ்சமே கொஞ்சம் சிரி' எனும் தலைப்பிலான கவியரங்கம், இன்னிசையரங்கு, விசேட கூத்து, ஒயிலாட்டம், ஸ்ரீ வள்ளி இசைநாடகம் என்பன நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் கலாசாரப் பேரவை உப வலயம் - 2 இன் உப தலைவர் சு.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ப.திலகநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன், வலி. வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ப.இராஜகோபாலன், பாரம்பரிய கலைஞர் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ.மெற்றாஸ்மயில், மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி, தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க தலைவர் சி. சிவமகாராசா, சுன்னாகம் மின்சார சபை மின் அத்தியட்சகர் அ.நாகராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதின சிறப்பு நிகழ்வுகளாக யூனியன் கல்லூரி மாணவர்களின் நாடகமும், பொன்.கணேசமூர்த்தியின் தலைமையிலான பட்டிமன்றமும், கலாபூசணம் வ.செல்லத்துரையின் இன்னிசையரங்கும் நடைபெறவுள்ளன. (94)

# தென்மராட்சி மாணவர்களுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை

(தென்மராட்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பகுதி பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்தகால யுத்தத்தாலும், இடம்பெயர்வாலும் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் ஏராளமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்களது நலனைக் கவனத்திற்கொண்டு இந்தச் சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெவ்) தென்மராட்சி கல்விப் பணிமனையூடாக மேற்கொண்டுள்ளது. (17)

# வீடுகள் கையளிக்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவு தினத்தைமுன்னிட்டு, வடமராட்சி கிழக்கில் 5 மாவீரர் குடும்பங்களுக்கு நிரந்தரக் காணியுடன் வீடுகள் அமைத்துக் கையளிக்கப் பட்டன.

இந்த நிகழ்வு - திலீபனின் நினைவுதின இறுதிநாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, வடமராட்சி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் செ. சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், கடற்புலிகளின் துணைத்தளபதி மங்களேஸ் மற்றும் மாவீரர், போராளி, குடும்பநலன் காப்பகங்களைச் சேர்ந்தோர் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (14)

# அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(சண்டிலிப்பாய்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றில் ஏற்படவுள்ள அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு,

இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2.1, வகுப்பு 2.11 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

மாதிரி விண்ணப்பத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள், தமது விண்ணப்பங்களை - 15.11.2004 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

# ஆங்கில ஆசிரியருக்கான பயிற்சிக் கருத்தரங்கு!

ஆங்கில மொழி கற்பிக்கும் சமூகத்தினருக்கான பயிற்சி வழங்கும் செயற்திட்டக் கருத்தரங்கு ஒக்ரோபர் 20 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை யாழ்.கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான செயலமர்வை பிராந்திய் ஆங்கில ஆதார நிலையத்தினர் பிரித்தானிய சபையின் அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

இதற்கென 5 வலயங்களையும் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அழைக்கப்படவுள்ளனர்.

எமது சமூகத்தினருக்கு வெளிநாட்டவர்களைக் கொண்டு ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படுகின்ற நிலையை மாற்றி, இனிவரும் காலங்களில் எமது ஆங்கில ஆசிரியர்களைக் கொண்டே பயிற்சியளிக்கும் நிலை உருவாகவேண்டும் என்ற நோக்கிலேயே இந்த வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்விக் கழகப் பிராந்திய ஆங்கில ஆதார நிலையத்தினர் தெரிவித்தனர்.

இதற்குரிய மாதிரிப் பயிற்சிநெறி கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது எனவும், எதிர்வரும் ஒக்ரோபர் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்குச் செயலமர்வு நல்ல பலனைத் தரும் என நம்புவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## விவசாய உள்ளீடுகள் விநியோகம்

மறவன்புலவு, கோயிலாக்கண்டி ஆகிய பிரதேசங்களில் விவசாயச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உள்ளீடுகள், உர வகைகள் என்பன இலவசமாக வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இவற்றை கைதடி கமநல நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என கைதடி பெரும்போக உத்தியோகத்தர் தெரிவித்தார். (29)

## சிறந்த விவசாயி தெரிவு

கமநல சேவை திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்டத்தின் சிறந்த முதிய விவசாயிகள் தெரிவில் யாழ். மாவட்டத்தில் சிறந்த விவசாயியாக மானிப்பாய், பொன்னாலை வீதி கட்டுடையைச் சேர்ந்த சி.பொ.ம.வ.க.முதலியார் தெரிவு செய்யப்பட்டார்.

## தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் தவறவிடப்பட்ட பின்வரும் பெயர்களை உடையவர்களின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யோ.விஜயலட்சுமி (சங்கத்தானை), ஐ.கிருஷ்ணவாணி (நாவற்காடு - வரணி), நா.கந்தசாமி (உடுவில் கிழக்கு), செ.கிருஸ்ணராணி (குடமியன்) ஆகியோரது அடையாள அட்டைகளே ஒப்படைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : கு.அபிஷானி

விலாசம் : துன்னாலை மத்தி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



பெற்றோர் ஒப்பம்




# செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு

# நிகொட் நிதியுதவியுடன் இரண்டு மாடிக்கட்டடம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் வைத்தியசாலைக்கு நிகொட்டின் நிதியுதவியுடன் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் பணியாளர்கள் பற்றாக்குறையை நீக்கும் முகமாக தற்போது தொண்டர்களாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குமாறு மாகாண அமைச்சை கேட்டுக் கொண்டுள்ளதாகவும், அதற்கு ஆயிரம் பேரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இவர்களை நியமிப்பது தொடர்பான அனுமதியை திறைசேரி வழங்கியதுடன்' அதற்கான அனுமதி வழங்கப்படுமென மாகாண அமைச்சு பதிலளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலுக்குளம், நேரிய குளம், சிதம்பரபுரம், புளியங்குளம் மற்றும் நெடுங்கேணி போன்ற பகுதி களில் வாழும் மக்களின் வைத்திய சேவையை கருத்திற்கொண்டு அந்தப் பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளில் சகல வசதிகளுடன் கூடிய மகப்பேற்று விடுதிகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (03)

# ஐயனார்புரம் அரசினர் பாடசாலை

# தற்காலிக கொட்டகையில் இயங்குகிறது

வன்னேரிக்குளம் ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக கொட்டகைகளில் ஏற்பட்டுள்ள துவாரங்களினூடாக மழை நீர் உட்புகுவதால் ஆசிரியர், மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப் பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள கட்டடம் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பட்ட நிலையில் இதுவரையில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

எனினும் தற்போது இருக்கும் தற்காலிக கொட்டகைகள் வேய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்தப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் விசனம் தெரிவித்தனர்.

# 20 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை

# வவுனியா நெடுங்கேணி பிரதேச வீதிகள்

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச வீதிகள் 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில், குன்றும் குழியுமாக சேதமுற்று காணப்படுகிறன.

நெடுங்கேணியில் இருந்து முல்லைத்தீவு, மருதோடை பட்டிகுடியிருப்பு மற்றும் ஒதியமலைக்கு செல்லும் வீதிகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் குளவிசுட்டான், மாறா இலுப்பை வீதிகளும் நீண்டகாலமாக சேதமுற்று காணப்படுகிறது. ஆனால் இதுவரை இந்த வீதிகளை திருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது மழைக்காலம் ஆகையால் குன்றும் குழியுமாக இருக்கும் இந்த வீதிகளில் பயணம் செய்யும் மாணவர்கள், நோயாளிகள், விவசாயிகள், வியாபாரிகள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# ஒட்டுசுட்டான் பொதுக்கிணறுகள்

# பாவிக்க முடியாத நிலையில்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பொதுக்கிணறுகள் துப்பரவு செய்யப்படாததால் நீரினை பாவிக்கமுடியாத நிலையிலுள்ளது.

1998 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட ரிவிபல படை நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டானை கைப்பற்றிய இராணுவத்தினர் இந்த பொதுக்கிணறுகளில் கழிவுப்பொருட்களை போட்டுச் சென்றுள்ளனர்.

தற்போது இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் பொதுக்கிணறுகள் துப்பரவு செய்யப்படாமையால் மக்கள் அவற்றை பாவிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

# உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தால்

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வத்திராயன் கிராமத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடாத்திய 29 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பாரதி விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தையும், சுற்றுக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்தச் சுற்றுப் போட்டியின் சிறந்த விளையாட்டு வீரராக பாரதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தெ.ஜெயசுதாகர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வின் போட்டி மத்தியஸ்தராக பி.நவநீதமணி கடமையாற்றினார். (21)

## இந்திய மீனவர் ஊடுருவலை

# கட்டுப்படுத்துவதற்கு உதவுமாறு

# மன்னார் ஆயரிடம் கோரிக்கை

மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் எனவே, இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவிபுரிய வேண்டுமென மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசம், மன்னார் ஆயரிடம் முறையிட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் ஆயரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது -

வாரத்தில் திங்கள், புதன், மற்றும் சனிக்கிழமைகளில் இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளில் மாத்திரமல்ல சாதாரண படகுகளிலும் வந்து மீன்பிடிக்கின்றனர். இதனால் மன்னார் மாவட்ட மீனவர்களின் தொழில் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல் தொடர்பாக கடற்படையினருக்குதெரிந்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை மீன்பிடி அமைச்சின் செயலாளரான பம்பரவணகே எதிர்வரும் இரண்டாம் திகதி மன்னாருக்கு வருகை தரவுள்ளார்.இவர் மன்னார் வளைகுடாப் பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்துவது தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

மீன்கள் பெருகும் காலப் பகுதியில் மீனவர்கள் எவரும் அப்பகுதிக்கு செல்லக்கூடாதென்பதற்காகவே மன்னார் வளைகுடாப்பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

எனவே மீன்பிடி அமைச்சின் செயலாளர் இரண்டாம் திகதி வரும்வேளை அவருடன் இணைந்து கடற்படைத்தளபதி தனது சார்பாக ஒருவரை அனுப்பி மன்னார் மீனவர்களின குறைகளை கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமெனக் கோரித்தான் கடற்படைத்தளபதிக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் ஆயர் தெரிவித்தார். (201)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பள்ளிக்குடா கடற்தொழிலாளர்கள் குடிநீரைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்பொழுது பூநகரி பிரதேச செயலகம் இந்த சிரமத்தைக் கருத்திற்கொண்டு நீர்த்தாங்கி ஒன்றை வழங்கியுள்ளது. இதனால் இந்த கடற்தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## மோசமானநிலையில் நாயாறு வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளைக் குட்பட்ட பல வீதிகள் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து முள்ளியவளை, நாயாறு வீதிகள் படுமோசமாக பழுதடைந்த நிலையிலுள்ளது. இந்த வீதிகளை திருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இதுவரைகாலமும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

## கடனுதவி வழங்கல்

(மன்னார்)

மன்னார் அடம்பன் பிரதேச விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக்கான கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இந்தக் கடனுதவியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 10 ஆயிரம் ரூபா வீதம் கிராமிய வங்கியூடாக வழங்கவுள்ளது.

## வெள்ளப்பெருக்கு

(மன்னார்)

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் மன்னார் பாலியாறு மற்றும் குருமன்குள ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால் வன்னி மேற்கு பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மன்னார் - பூநகரி வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்வதால் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்வோர் அவற்றை தோளில் சுமந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## சுயதொழில் கடன் வழங்கல்

(மன்னார்)

கடந்த காலத்தில் நடைபெற்ற போரினால் பெரும் அழிவுகளை சந்தித்த மாந்தை மேற்கு பகுதி கிராமங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் மன்னார் பாலந்தன், பரப்புக்கடந்தான் மற்றும் பரப்பாங்கண்டல் ஆகிய கிராமங்களில் இந்தப் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுக்கிணறுகள், பொதுநோக்கு மண்டபம் என்பன அமைத்தல் சுயதொழில் கடன் வழங்கல் என்பன இதற்குள் அடங்கும்.

## கட்டடம் திறப்பு

(மன்னார்)

மன்னார் விடத்தற்தீவு மருத்துவமனையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் நாளை திறந்து வ்வைக்கப்படவுள்ளது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இந்த மருத்துவமனை முதன்மையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நிரந்தர வைத்தியர் இல்லை

கிளிநொச்சி முழங்காவில் மருத்துவமனை நிரந்தர வைத்தியர் இன்றி இயங்கிவருகின்றது.

இந்த வைத்தியசாலையில் கடந்த மாதம் 663 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக கடமையாற்றும் வைத்தியர்களே இந்த சிகிச்சையை வழங்கியுள்ளனர். இங்கு நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறை தொண்டர்கள் மூலமே நிவர்த்தி செய்யப்படுகிறது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

### சமுர்த்தி நிவாரண புள்ளிவிபரங்கள்

வவுனியா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 722 சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக, வவுனியா சமுர்த்தி அலுவலகம் தெரிவித்தது.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 835 குடும்பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 1218 குடும்பங்களும், வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 669 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுவதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டு நிவாரணம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

(அக்கராயன்)

அக்கராயன் கோணாவில் வீதியில் மண் அரிப்பு ஏற்பட்டு குழி ஒன்று தோன்றியுள்ளது. இந்தக் குழியானது தற்போது பெய்துவரும் மழை காரணமாக பெரியளவிலான கிடங்காகவுள்ளது. இதனால் அந்த வீதியில் இரவில் பயணிப்போர் அந்தக் குழியில் விழும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் இதுவரையில் எதுவித கவனமெதுவும் எடுக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

### கட்டடவேலைகள் பூர்த்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வந்த இரண்டு மாடி கட்டட வேலைகள் முடிவடைந்துள்ளன.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு வரட்சி நிவாரணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதங்களில் நிலவிய கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

புதுக்கமம், உயிலங்குளம், நீராச்சேனை, தீககராசன்குளம், மடத்தாங்கண்டல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 153 விவசாயிகள் இந்த வரட்சி நிவாரணத்தை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வரட்சி நிவாரணத்தை வழங்குவதற்கு 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இன்று பெண்கள் சங்கம நிகழ்வு

(முல்லைத்தீவு)

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு பெண்கள் சங்கம் நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டு கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவுள்ளனர் என மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வேதினி தெரிவித்தார்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க*
*சொல்லின் பயன்இலாச் சொல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிறுவர்தினம், சில எண்ணங்கள

நேற்றையதினம் உலகெங்கும் சிறுவர்தின நிகழ்வுகள் பரந்தளவில் சிறப்பாக நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் இந்த நாளில் சிறுவர் தினத்தைப் பல்வேறு குறிக்கோள்கள், திட்டங்களுடன் மேற்கொள்ளப்பட்டே வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சிறுவர் தினத்தையொட்டி புதிய, புதிய கோஷங்களும், பிரகடனங்களும் முன்வைக்கப்பட்டே வருகிறது.

இந்த ஒருநாள் நிகழ்வுகள் அனைத்தும் உலகம் முழுவதும் சிறுவர் நலனை மிகுந்த அக்கறைமிக்க ஆர்வத்துடன் நோக்குகின்றது. என்ற உணர்வை ஏற்படுத்தி - இனி சிறுவர்களின் எதிர்காலம் மலர்ச்சியடையும் என்ற எண்ணத்தையும், ஏற்படுத்தினாலும்கூட, அந்த நாள் முடிந்த அடுத்தடுத்த நாடகளிலேயே அவை எல்லாம் மறக்கப்பட்ட விடயங்களாகி அடுத்த சிறுவர் தினம் வரும்வரை கிடப்பில்போடப்படும் விடயங்களாகிவிடுவதையே காணக்கூடியதாக இருக்கிறது. இதுவே துயரம் தரும் விடயமாகும்.

ஆண்டுதோறும் மில்லியன் கணக்கிலான நிதி - சிறுவர் நலனகளைப் பேணுவதற்காக சர்வதேச அரச, அரச சார்பற்ற அமைப்புக்களால் ஒதுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

ஆனால், அந்த நிதி அந்தந்த அமைப்புக்களின் நிர்வாகம் மற்றும் வாகனப்போக்குவரத்து, பிரசார நடவடிக்கைகளுக்கே பெருமளவு செலவாகிவிடுவதுதான் உண்மை.

'திட்டமிடலுக்கான செலவு, அலுவலக பராமரிப்புக்குரிய செலவு, ஊழியர்களுக்கான ஊதியச்செலவு, அறிக்கைகள் மற்றும் ஆவணங்களைப் பேணுவதற்கான செலவு, குறிப்பிட்ட திட்டம் குறித்து பிரமாண்டமான அளவு பிரசாரங்களை மேற்கொள்வதற்கான செலவுகள் எனப் பல மில்லியன்கள்போக- அவ்வப்போது சில புத்தகங்கள், புத்தகப்பைகள், கற்றலுக்கான ஏனைய உபகரணங்கள் போன்றவற்றை சிறுவர்களுக்கு வழங்குவதற்கென சில லட்சங்கள் செலவிடப்படுவதுடன் பெரும்பான்மையான சிறுவர்களின் கல்விநலன் சார்ந்த திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிடுகின்றன.

இதில் எந்தவிதமான நன்மையோ, அர்த்தமோ இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வளவு மில்லியன்கள் செலவான பின்னர் பல்லாயிரக் கணக்கான ரூபா செலவில் ஒவ்வொரு சிறுவரும் கல்வி கற்கும் உரிமையுடையவர்கள். என்ற பிரகடனம் எழுதப்பட்ட பிர்சார விளம்பரப் பலகையின் கீழ் பள்ளிசெல்லவேண்டிய வயதில் கச்சான் விற்கும் சிறுவர்களை ஏ9 நெடுஞ்சாலையில் காணும்போது மனதிற்கு என்னவோ செய்கிறது.

அதேவழியாக எத்தனையோ அரச - அரசசார்பற்ற சிறுவர் நலன் காப்பதாகக் கூறப்படும் நிறுவனங்களின் வாகனங்களையும் அவ்ர்களைக் கடந்துசெல்வதைப் பார்க்ககூடியதாக இருக்கின்றது.

அவர்களின் பார்வையில் இத்தகைய ஏழைச் சிறுவர்களின் குரலோ, நிலையோ எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை.

பொது இடங்கள், பேருந்து தரிப்பு நிலையங்கள், நகர்ப்புறத்து பெரு வர்த்தகமையத் தெருக்கள் போன்றவற்றில் பள்ளிசென்று பயிலவேண்டிய வயதில் கூலித்தொழில் செய்வோராகவும், பிச்சை எடுப்பவராகவும், பரட்டைத் தலையும், பஞ்சடைந்த கண்களும், வறுமைக்கோலம் காட்டும் உடல்களுமாக வலம்வரும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களுக்காக எந்த அமைப்பும் எந்தப் புனர்வாழ்வுப் பணியையும் பொறுப்புணர்வுடன் தீர்க்கமான திட்டத்துடன் ஒரு தொடர்நடவடிக்கையாக மேற்கொண்டது கிடையாது.

வெறுமனே அப்படிச் செய்தோம், இப்படிச்செய்தோம் என புள்ளிவிபரப்பட்டில்களுடன் அறிக்கைகளை வெளியிட்டு, ஜம்பம் அடிப்பதில் பயனில்லை.

சிறுவர்களின் பிரச்சினைகளை அதற்கேயுரிய மனோ தர்மத்துடன்கூடிய பரந்த சிந்தனையுடன் அணுகவேண்டும்.

எந்தச் சிறுவனோ, சிறுமியோ பிச்சை எடுக்கவோ, கூலி வேலை செய்யவோ அல்லது வேறெந்த சட்ட - சமூகவிரோத செயல்களிலோ தாமாகவே ஈடுபடுகின்றார்கள். என்பது கிடையவே கிடையாது.

அவர்களை அந்த நிலைக்குத் தள்ளுவது பொருளாதார- சமூக ஏற்றத்தாழ்வுடன் கூடிய வாழ்வியல் பிரச்சினைகளேயாகும். இதன் பின்னணியில் அரசியல் - சமூகவியல் கட்டமைப்புக்களின் சீரழிவுத் தன்மைகளே இயங்கு சக்தியாக உள்ளதை புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தச் சிறுவர்களின் உளவளம் பேணப்படாத இடத்து அவர்களை உன்னதமானவர்களாக்குதல் சாத்தியமே இல்லை.

வறுமை, சமூக ஒடுக்குமுறை, தாழ்வுச் சிக்கல், அறியாமை போன்ற குடும்பச் சூழல், யுத்தம், அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கும் மனம், சுற்றுச்சூழல் ஏற்படுத்தும் அச்சம் என பல்வேறு காரணிகள் இன்றைய சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் மூலங்களாகி நிற்கின்றன.

இந்த மூலங்கள் முற்றாகக் களையப்படாத நிலையில் - சிறுவர்கள் நலன்பேனல் என்று போடப்படும் திட்டங்களால் எந்த நன்மையும் விளையப்போவது கிடையாது.

வருங்காலத் தலைமுறையினர் வளமான முறையில் வளர்க்கப்படாதுவிடின் எந்தத் தேசமும் வளம்பெறப்போவது கிடையாது.

சிறுவர்களின் எதிர்காலம் குறித்து - கவலைப்படுவதாக, அக்கறைப்படுவதாக தம்மைப்பற்றி பிரசாரம் செய்துகொள்ளும் தேசிய சர்வதேசிய அமைப்புகளே இதனைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

## நாடும் நடப்பும்




# மணிராசன்குளம் முகாம் குறித்து ஜே.வி.பி மௌனம் சாதிப்பது ஏன்

## ஐக்கிய தேசியக் கட்சி

ஜே.வி.பி. மற்றும் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் முன்பு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில், திருமலை மணிராசன்குளம் விடுதலைப்புலிகளின் முகாம் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்புப் பிரச்சனைகளை எழுப்பினார்கள்.

ஆனால், இன்று திருமலையில் என்ன நடக்கிறது எனக் கேள்வி எழுப்பியுள்ள ஐக்கியதேசியக் கட்சியின் பிரதி செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபின் நாளாந்தம் கொலைகளே அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தாம் எதிர்க்கட்சியில் இருந்தால், தானும் விலைவாசி அதிகரிப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையே மேற்கொள்வார் எனத் தெரிவித்தால் ஏன் அவர் ஆட்சியில் இருக்கவேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

ஆட்சியில் இருந்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது போனால் அவர் ஆட்சியை விட்டு விலகவேண்டும எனவும் கோரிக்கை விடுத்தார்.

எதிர்வரும் 2 மாதகாலப்பகுதிக்குள் ஐக்கிய தேசிய கட்சி நாடளாவிய ரீதியில் 50 க்கும் மேற்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ். மாவட்டத்தில்

# எச்.ஐ.வி. தொற்று நோய்க்கு ஆளாவோர் தொகை அதிகரிப்பு

## பிராந்திய தாய் - சேய் வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தற்போது வேகமாகப் பரவிவரும் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகி பாதிக்கப்படுவோர்களில் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்படுவோரின் வீதம் கூடுதலாகவுள்ளமை கவலை தரும் விடயமாக உள்ளதாக, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிராந்திய தாய் - சேய் நல வைத்திய அதிகாரி டொக்டர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது -

இதுவரை இலங்கையில் இந்த நோய் காரணமாக 124 பேர் வரையில் மரணம் அடைந்துள்ளனர். அவ்வாறு மரணமடைந்தவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 24 பேர்களும் அடங்குவர். இது ஒப்பீட்டளவில் மிகவும் கூடிய அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது.

தற்போது எமது பகுதிகளில் வெளிநாட்டவர்களின் வருகை மிகவும் அதிகரித்துள்ளதால், காலப் போக்கில் இதன் பரவுகை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால், இதனைத் தடுப்பதற்கு பற்பல புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இந்த நோய் ஒருவருக்குத் தொற்றியிருந்தால்கூட அதற்கான அறிகுறிகள் சில வருடங்களுக்குப் பின்பே தெரியத் தொடங்கும் என்பதால், விரைவில் நோயை இனம் காணமுடியாதிருப்பதே பாரிய பிரச்சினை எனவும், இதற்கு உலகளாவியரீதியில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டை மோசமான நிலைக்கு அரசாங்கம் இட்டுச் செல்கிறது

## விக்கிரமபாகு கருனாரட்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதுடன், கிராமப்புற மக்களையும் சமாதானத்துடன் இணைத்து அனைவரும் ஒன்று சேர்ந்து உண்மையான அமைதியை ஏற்படுத்த முனைய வேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் சமாதான முயற்சியில் காலத்தை வீணடிப்பதாகத் தெரிவித்த அவர் இனவாதக் கட்சிகளோடு சேர்ந்து நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் மனப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர் அதனை ஏற்படுத்த அனைவரும் ஒன்று திரளவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

விலைவாசி உயர்வு மற்றும் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து கோட்டைப் புகையிரத நிலைய முன்றலில் நேற்று இடம்பெற்ற இடதுசாரி முன்னணியின் ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வழங்கிய விசேட செவ்வியில் -

இலங்கையில் சமாதானம் மிகவும் அவசியமானது எனத் தெரிவித்துள்ள கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆட்சியில் சமாதானத்திற்காக முழுமனதுடன் செயற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# குறிகட்டுவான் பகுதியில் கடற்படை சோதனை தீவிரம்

நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் துறைமுகம் ஊடாக வேறு இடங்களுக்குச் சென்றுவரும் பொதுமக்கள் குறிகட்டுவான பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் கடும்சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

நெடுந்தீவில் இருந்து செல்லும்போது அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு உடமைகளும் துருவித் துருவிச் சோதனையிடப்படுவதுடன் நெடுந்தீவுக்கு வரும் பயணிகளுக்கும் இதே நடைமுறை கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் அனைவரும் குறிகட்டுவான்துறைமுகப்பகுதி காவலரணில் தங்கள் பெயர்களையும், அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவுசெய்து செல்லும் நடைமுறை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரின் இந்த நடவடிக்கையினால் நெடுந்தீவு பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# இவ்வார பலன்கள்
# 01-10-2004 07-10-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு சந் | | |
| யுரே | | | சனி |
| நெப் | 02 பகல் 1-01 இட - சந்<br>04 இரவு 12-38 மிது - சந்<br>07 பகல் 1-12 கட - சந் | | சுக். |
| | | கேது | சூ. செவ்<br>புத. குரு |



### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு வியாழ சகமா குன்றியிருப்பதால், குடும்ப வாழ்க்கையில் அவ்வப்போது பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. எடுத்த காரியங்களில் தடை, தாமதம் ஏற்படும். பண வருவாயகளில் தடை, தாமதம் ஏற்படும். பணவருவாய்க்கு மிஞ்சிய செலவு காட்டும். தேகாரோக்கியமும் இடையிடையே பாதிக்கப்படலாம். மங்கள கருமங்கள் காலந்தைப் பின் தள்ளும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளோ, நன் மாற்றங்களோ கிடைபாது. முயற்சிக்கேற்ப பலன் உண்டு, வியாபாரிகளுக்கு மந்த நிலை காட்டும். இலாபம் கிடைப்பது குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு ஊக்கம் குறையும். எனினும் முயற்சிக்கேற்ப பெறுபேறுகள் அமையும்.



### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசிக்காரருக்கு லக்கினத்துக்கு குருபார்வை இருப்பதால் இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படும். வீட்டில் குதூகலம நிரம்பிக் காணப்படும். பொருளாதாரம் சிறப்பாக அமையும். தேககசுகம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் மரியாதை உண்டு. அதிகாரிகளின் ஒத்துழைப்பால் பதவி உயர்வு, வசதியான இடமாற்றங்கள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பிரச்சினையில்லாமல் நன்றாக நடக்கும். அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடியலாபம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். பாராட்டுக்களும் உண்டு.



### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுனராசியினருக்கு இந்த வாரம் நன்மை, தீமை கலந்த பலன்களே ஏற்படும். குடும்பஸ்தர்களுக்கு வருவாய் இருப்பினும் புத்திரர்களால் செலவு அதிகமாகும். முன்னேற்றங்கள் தடைப்படும். இனசனந்துக்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். தேகசுகம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் ஒத்துழைப்புக் கிடைக்கும். பதவி உயர்வு காலந்தள்ளிப் போகும். அதிகாரிகளின் போக்குக்கேற்ப தாளம் போடுதல் நன்மை பயக்கும். வர்த்தகர்களுக்கு வியாபார வளர்ச்சி குன்றும். கொடுத்த கடன்களை மீளப் பெறுவது கஷ்டம். மாணவர்களுக்கு முன்னேற்றம் மந்தமும்.



### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு ஏழரைச் சனி வியாழசுகமும் இல்லை. எனவே, இவர்கள் பலவேறு இன்னல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கும். சுகக்குறைவுகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் மலிந்து காணப்படும். இனபந்துகளுடனும் சண்டை சச்சரவுகள் தோன்றும். பண வருவாய் குறையும். வைத்தியச் செலவும் அதிகமாகும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு பல சிரமங்களும், வேலைப்பளுவும் ஏற்படும். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டி வரலாம். வர்த்தகர்களுக்கு முதலீகள் தேங்கிக்கிடக்கும். விற்பனை மிகக் குறைவு. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் பாதிக்கப்படும்.



### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு சுக பலனே இவ்வாரம் நிலவும். குடும்பசுகம் அதிகம் திருப்தியாக இல்லை. புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். வருமானத்திலும் பார்க்க செலவு கூடுதலாகக்காட்டும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது நன்று. எதிலும் தெய்வ நம்பிக்கை அவசியம். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் பின் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் தம் பணிகளைச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவர். சக தொழிலாளர்களின் உதவி உண்டு. அதிகாரிகள் ஒத்துழைக்க மறுப்பர். வியாபாரிகளுக்கு விற்பனை மந்தமாகவே நடக்கும். வங்கி உதவி தேவையான தருணத்தில் கிடையாது. மாணவர்களுக்கு முயற்சி தேவை.



### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னி ராசியினருக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். புத்திரர்களால் நன்மை உண்டு. இனபந்துக்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். தேக ஆரோக கியம் சிறிது பாதிக்கப்பட்டாலும் பெரிதாக ஒன்றும் இல்லை. பணவருவாய் திருப்தியாக அமையும். குடும்பப் பெண்கள் சந்தோசமாக் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றம் மந்த நிலையிலேயே இருக்கும். வழமையான தொழில்கள் சிக்கல் இல்லாமல் நடக்கும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதம் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நடுத்தரமாக அமையும். உள்ள பொருட்கள் சாதாரணமாக விலை போகும். மாணவர்கள் கல்வியில் உற்சாகம் உடையவர்களாகக் காணப்படுவர்.

### துலாம்
*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



துலாராசியினருக்கு குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். உறவினர்கள், அயலவர்கள் தொல்லை தருவர். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் சிறப்பாக இருக்கும். பெரியோர்களின் உதவி கிட்டும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையக்கூடும். வருமானம் இருப்பினும் செலவுகள் அதிகமாக இருக்கும். நினைத்த கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். பெண்களுக்கு நிதானம் தேவை. திருமணப்பேச்சக்கள் காலந்தள்ளும் உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் நடுத்தரமாகவே இருக்கும். மாணவர்களுக்கு முன் னேற்றத்தில் தடங்கல் ஏற்படலாம்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் தெய்வீக சிந்தனைகள் அதிகரிக்கும். உல்லாசப் பிரயாணங்கள் கைகூடும். பெரியவர்களின் உதவி கிட்டும். திடீர் பொருள் வரவு வர இடமுண்டு. தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். எடுத்த கருமங்களில் வெற்றி கிட்டும். மணவாழ்க்கையை விரும்புவோர் மகிழ்ச்சியடைவர். உத்தியோகத்தர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணம் சேரும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர் சிலருக்க வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு.



### தனுசு
(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு எட்டில் சனியும், பத்தில் வியாழனும் நடப்பதால் வாழ்க்கையில் மனநிம்மதி பாதிக்கப்படும். குடும்பத்தில் தொல் லைகளும், சுகக்குறைவுகளும் பொறு மையைச் சோதிப்பதாக அமையும். பண விடயத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவுகளே காணப்படும். தொடங்கும் கருமங்களில் தடை, தாமதம் ஏற்படும். மண வாழ்க்கையை விரும்புபவர்களுக்கு காலம் அனுகூலமாக இல்லை. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடு பிடிகள் அதிகமாக இருக்கும். சக உதவிகளும் குறை யும். வர்த்தகர்களுக்கு வீண் விரயங்கள் ஏற்படும். கொடுத்த கடன்களை திரும்பப் பெறுவது கடினம். எதிலும் அவதானம் தேவை. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். முயற்சி திருவினையாக்கும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு வியாழ பார்வை இருப்பதால் இவர்களுக்கு வாழக்கையில் இனிமை பொங்கும். கடன் தொல்லைகள தீரும். பெரியோர்கள் உதவுவார்கள். தேகா ரோக்கியம் சிறப்பாக இருக்கும். பண வரவு திருப்தியாக இருக்கும். வெளியிடங்களிலிருந்து வருவாய்கிட்டும். மண வாழ்க்கையை எதிர்பார்ப்போருக்கு மகிழ்ச் சியான காலம். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்கிடைக்கும். பதவி உயர்வையும் எதிர்பார்க்க முடியும். வியாபாரிகளுக்கு விற்பனை நன்றாக நடக்கும். பவுண்வியாபாரிகள் கூடுதல் லாபம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றம் அடைவர். சிலருக்கு கல்வி சம்பந்தமான பிரயாணம் ஏற்படும்.



### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

கும்ப ராசியினருக்கு அட்டமத்தில் வியாழன் இருப்பதால் குடும்ப உறவுக ளில் பிணக்குகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். இல்வாழ்க்கையில் நிம்மதி குறையும். மன உளைச்சல் கூடுதலாக இருக்கும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படும். வருவாய் குறையும். செலவுகள் அதிகரிக்கும். வீண் பிரச்சினை களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். மணவாழ்க்கை காலந்தள்ளிப் போகும். உத்தியோகத்தர்களுக்கு அலைச்சல் கூடுதலாக இருக்கும். வேலை மாற்றங்கள் தொல்லைகள் கொடுக்கும். சகாக்கள் உதவி செய்யார். வர்த்தகர்களுக்கு பொருட்சேதம், திருட்டு போன்றவற்றில் நட்டம் ஏற்படலாம். மாணவர்கள் ஊக்கமின்மை, சோம்பல், என்பவற்றால் முன்னேற்றம் தடைப்படும்.



### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியினருக்கு குடும்ப உறவுகள் சீராக இருக்கும். புத்திரர்களால் நன்மையுண்டு. இல்லறத்தில் மகிழ்ச்சி ததும்பும். தேகாரோக்கியம், பணவிடயம் பிரச்சினை கொடுக்காது. எடுத்த கருமங்கள் விருப்பப்படி நிறைவேறும். மங்கல கருமங்கள் விரைவில் சாத்தியமாகும். உத்தியோகத்தர்கள் பலரின் பாராட்டையும் பெறுவர். ஊதிய உயர்வு கிடைக்கும். அதிகாரிகள் பாராட்டுவர். வியாபாரிகளுக்கு வர்த்தகம் சிறப்பாக அமையும். தேங்கிக் கிடந்த முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும. புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். உயர்கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

## இங்கிருந்து எங்கே...

# அடுத்தவர் அபிப்பிராயம்

எமது அன்றாட வாழ்வில் நாம் ஆற்றுகின்ற பல காரியங்களுக்கு நாம் அடுத்தவரின் அபிப்பிராயத்தை, அங்கீகாரத்தை எதிர்பார்ப்பவர்களாக இருக்கிறோம். சரி, பிழை அறிவதற்கும் திருத்தங்கள் சொல்வதற்கும் அனுபவசாலிகள் அறிவு மிக்கவர்கள் போன்றோரின் கருத்தை எதிர்பார்ப்பது தவறில்லை. ஆனால் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் அடுத்தவரது பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது பல சமயங்களில் அறியாமை மிக்க ஒரு நடவடிக்கையாய் அமைவது துக்ககரமானது.

பொதுவாக - அடுத்தவர் பாராட்டில் குளிர்ந்து போவது மனித குணம். அது இயல்பானதும் கூட. ஆனால், நெருக்கடியான ஒரு நிலையில் பொறுப்பான ஒரு விடயம் தொடர்பாக - பொறுப்பில்லாத சிலரின் அபிப்பிராயம் அல்லது தீர்ப்பு மிகுந்த சிரமங்களை உருவாக்குவதுண்டு.

சில சமயங்களில் விபரீதங்கள் விளையவும் இவ்வாறான கருத்துக்கள் காரணமாகிப் போய்விடும் 'எனக்கென்றால் நீ செய்வது சரியாகவே படவில்லை' என ஒருவரது காரியம் தொடர்பாக நாம் கருத்துக் கூற முற்படுவோமெனில் - சம்பந்தப்பட்ட நபரை அவரது காரியத்தை - அதற்கான காரணத்தை செய்வதற்கு மேற்படி நபரை நிர்ப்பந்திக்கும் அகப்புறக் காரணிகளையெல்லாம் நாம் அறிந்திருக்க வேண்டும். பொறுப் புணர்வோடும் எதிர் விளைவுகள் குறித்த எச்சரிக்கையோடும் செயற்படும் கடமை எமக்கு உண்டு.

ஆனால் - பல சந்தர்ப்பங்களில் நாம் அவ்வாறு தொழிற்படுவதில்லை - 'எனக்கு அப்படி மனதிற்பட்டது. எனவே தான் அப்படிக் கூறினேன்' என்று ஒரு பொறுப்பான விடயம் பற்றிக் கூறிவிடுவது புத்திசாலித்தனமாகிவிடாது.

பூ விற்பனை செய்பவனிடத்தில், புகையிலை விற்பனை செய்பவன் தனது விற்பனைத் தர்மத்தைத் திணிக்க முற்படக் கூடாது. அதுவதற்கென்றும் அவரவர்க்கென்றும் சில தனித்தனியான தர்மங்கள் உண்டு.

அதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கசாப்புக்கடை நடாத்துபவனிடத்தில் அந்தத் தொழில் தொடர்பான சில கொள்கைகள் - அணுகுமுறைகள் - தர்மங்கள் என்பன இருக்கும்.

காலந்தவறாமல் கோயிலொன்றில் பூசை ஒழுங்குகளைக் கவனித்து. அர்ச்சனையும் - அபிசேகமும் செய்கின்ற பூசகருக்கென்று சில தர்மங்கள் இருக்கும்.

இவை ஒன்றுக்கொன்று குறைவானவையுமல்ல. இடையிலே நுழைகிறவர்கள் எவராயினும், அந்தந்தத் துறைசார் தர்மங்களைப் புரிந்து கொண்டு பேச வேண்டும். அத்தகைய ஒரு தேவை இல்லாத சூழலில் மிக மரியாதையாய் ஒதுங்கிவிடவேண்டும். இது சம்பந்தப்பட்ட எவருக்குமே ஆறுதல் தரக்கூடிய நடவடிக்கை. இதைவிடுத்து, நான் வயதில் மூத்தவன் - நான் அனுபவசாலி - நான் படித்தவன் என்று மகுடங்களைச் சூடிக்கொண்டு எதையும் குழப்பி விடுபவர்களாக நாம் மாறிவிடலாகாது.

போகிற போக்கில் நாம் விசிறிவிட்டுப் போகிற அபிப்பிராயம் சில சமயங்களில் மனங்களை உடைக்கிற உறவுகளின் ஆரோக்கியத்தைக் குலைக்கிற கருவியாகவும் மாறிவிட இடமுண்டு.

இத்தகைய எதிர்மறை விளைவுகளிலிருந்து எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள மிகவும்சிறந்த வழி எது தெரியுமா? எதையாவது ஒன்றைக் குறித்து முடிவெடுக்க முன் மிகத்தீர்மானமாகச் சிந்தித்து - விளைவை யோசித்து தேவை யென்றில் அந்த விடயம் குறித்துக் கூறவல்ல பொறுப்பாளர் சிலரைக் கலந்து யோசிப்பின் உறுதி குலையாத முடிவோடு காரியத்தில் இறங்குவதுதான்அந்த வழி.

ந. சத்தியபாலன்

# பொது நிதி அலுவலக முறைமை




நூல் :- பொதுநிதி அலுவலக முறைமை
நூல் ஆசிரியர் :- நாகமணி இராசநாயகம் B.Com பிரதம கணக்காளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.
கணினிப்பதிவு :- மகேஸ்வரி, கணினிவள நிலையம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
கணினி அமைப்பு :- க.கமலசேகரம்.
வெளியீடு :- திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம்.
அச்சிட்டோர் :- ஸ்ரீராம் பிறின்டேர்ஸ்.

அரசாங்கத் துறைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், தங்கள் கடமை சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் காலத்திற்குக் காலம் நடைபெறும் தகுதிகாண் தடைத்திறன் பரீட்சை, பதவியுயர்வுப் பரீட்சை போன்றவற்றில் தேர்ச்சி பெறுவதற்கும் போதிய தமிழ்நூல்கள் இல்லை எனும் குறை நீண்டகாலமாகவே இருந்துவருகிறது.

இந்தக் குறையைப் போக்குமுகமாகக் குறிப்பிடத்தக்க முக்கிய விடயங் களை உள்ளடக்கித் தோற்றம் பெற்றுள்ள ஓர் நூல்தான் "பொதுநிதி அலு வலக முறைமை" எனும் இந்த நூலெனக் கூறமுடியும்.

இந்த நூல் ஏற்கனவே இருதடவைகள் வெளிவந்திருக்கின்ற போதிலும் திருத்திய மூன்றாவது பதிப்பாக மிகவும் சிறப்பானமுறையில் மீண்டும் வெளி வந்திருக்கிறது.

அலுவலகங்களில் பணிபுரிவோர் தமது நிர்வாகக் கடமைகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கும், போட்டிப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறு வதற்கும் இந்த நூல் பெரிதும் துணையாக அமையும்.

இந்த நூலை உருவாக்கியவர், வர்த்தகமாணிப் பட்டத்துடன் அலுவலக நிர்வாக நடவடிக்கைகள், அலுவலக முகாமைத்துவம் முதலான துறைகளில் மேலதிக பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் மிக நீண்டகாலமாகவே அரசாங்க கணக்காளர் சேவையில் பணி புரிந்து வருகின்றமையை - இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் மூலமும் உணர்ந்து கொள்ளலாம்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் பயிற்சி நெறிக்குக் கூட உதவக்கூடிய வகையில் இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கின்றமை மேலும் சிறப்பைத் தருகிறது. நூறு பக்கங்களைக் கொண்டு வெளிவந்திருக் கும் இந்தப் புத்தகமானது, முழுக்கமுழுக்கக் கணக்கியலுடனும், நிர்வாக முகாமைத்துவத்துடனும் தொடர்புடைய விடயங்களை மட்டுமே கொண்டிருக்கிறது.

இதன் ஒரு பகுதியாக - சில முக்கிய பொதுமுகாமைத்துவ விடயங்களும் இணைக்கப்பட்டிருந்தால் இந்த நூலுக்கு மேலும் மெருகைக் கொடுத்திருக் கும் என்பதும் கூறவேண்டிய உண்மையே.

- செந்தணன்.

ஈராக்கின் சமரா பகுதியில்

# அமெரிக்கப்படை தாக்குதல்

# 94பேர் பலி; பலர் படுகாயம்!

(பாக்தாத்)

ஈராக்கின் சமரா நகர்மீது அமெரிக்கப படைகள் மேற்கொண்ட கோரத தாக்குதலில் 94 பேர் கொலலப்பட்டனர்.

சமரா நகரில் உள்ள அரச கட்டடங்களில் தங்கியிருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாகவும், கொல்லப்பட்ட அனைவரும் தீவிரவாதிகள் எனவும் அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

ஆனால், கொல்லப்பட்டவர்களில் 20 க்கும் மேற்பட்டவர்கள் பொதுமக்கள் எனவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

தீவிரவாதிகள் தங்கியிருந்த கட்டடங்கள் மீது அமெரிக்கப் படையினர் தாங்கிகள், போர் விமானங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் ஆகியவற்றின் உதவியுடன் தாக்குதல் நடத்தியதாகவும், இதனைத் தொடர்ந்து தீவிரவாதிகள் மோட்டார் மற்றும் கிரனைற் ஆகியன கொண்டு அமெரிக்கப் படையினர் மீது பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்தத் தாக்குதல்களின்போது மூன்று அமெரிக்கப்படையினர் காயமடைந்ததாகத் தெரிவித்துள்ள




போதும் சில அமெரிக்கப் படையினர் கொல்லபட்டுள்ளதாகவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

தாம் மேற்கொண்ட தாக்குதல்களின் மூலம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கபட்டிருந்த துருக்கிய பிரஜை ஒருவரை மீட்டுள்ளதாக அமெரிக்கப்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சீனாவில் பஸ் விபத்து 24 பயணிகள் உயிரிழப்பு

சீனாவில் நடந்த பஸ் விபத்தில் 24 பேர் பலியானார்கள். 45 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து அன்கூய் மாநிலத்தில் நடந்தது. லொறியும், பஸ்ஸும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் பஸ்ஸில் இருந்த 24 பயணிகள் பலியானார்கள்.

நேற்று சீனாவின் தேசிய தினமாகும். அத்துடன் சீனப் புத்தாண்டு தினமுமாகும். இதையொட்டி அரசாங்க விடுமுறை என்பதால் சொந்த ஊருக்கும், சுற்றுலாத் தலங்களுக்குமென மக்கள் பெருமளவில் பயணம் செய்தனர். இதனால் வீதிகளில் வாகனங்கள் வழக்கத்தைவிட கூடுதலாக இருந்தன.

# பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு பத்தொன்பதுபேர் பலி; பலர் படுகாயம்!



(இஸ்லாமாத்)

பாகிஸ்தானின் கிழக்கு பகுதியில் உள்ள சியல்கொட் நகரத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 19 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயங்களுக்கு உள்ளானதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றையதினம் தொழுகைக்காகப் பல முஸ்லிம்கள் பள்ளிவாசலில் கூடியிருந்தவேளை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் பாகிஸ்தானுக்கு எதிரான, இஸ்லாமிய மதத்திற்கு எதிரானவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் ஷேக் ரசீத் அகமட் - ஏ.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் படி வெடித்தகுண்டு பை ஒன்றினுள் அல்லது பயணப்பொதி ஒன்றினுள் மறைத்து வைத்திருந்ததற்கான சாத்தியங்கள் இருந்ததாக பாகிஸ்தானியப் பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாசலின் நடுப்பகுதியிலேயே குண்டுவெடித்ததாக பி.பி.ஸியின் சபார் அப்பாஸ் தெரிவித்தார். குண்டுவெடித்த இடத்தில் இரண்டு அடி ஆழமான குழி ஏற்பட்டுள்ளதாகவும், குண்டுவெடித்த நேரம் காயமடைந்த மற்றும் கொல்லப்பட்ட அனைவரும் நிலத்திலிருந்து தூக்கி வீசப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.


## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் பொருத்தமான ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:**

01. கல்வித்தகைமை - க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

02. அகவை - 16 தொடக்கம் 21 வரை.

*குறிப்பு :*

01. வேண்டுகை முடிவு நாள் : 05.10.2004.

[illegible] நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் : 09.10.2004 காலை 9.00 மணி.
இடம் :- கிளி/மத்திய கல்லூரி,
ஏ-9 வீதி,
கிளிநொச்சி.

04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும், அவற்றின் நிழற்பட படிகைகளையும் கொண்டு வருக.

05. பயிற்சி காலத்தில் 4000/- ரூபா உதவிக்கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.

06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.

08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.

09. பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கமைவாகச் சம்பளம்

ஆளுநகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி.

(C/2862)



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தரம் 1, தரம் 6 ஆம் வகுப்புகளுக்கான

அனுமதி - 2005

பின்வரும் வகுப்புகளுக்கான அனுமதிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தரம் 01

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஜனவரி 31 - 2004 வரை பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

தரம் 06

தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சையில் நூறு (100) புள்ளிகள் வரை பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 2004.10.06

* அலுவலக நேரத்தில் விண்ணப்பப்பத்திரத்தைப் பெறலாம்.
* கல்லூரியில் பெறும் விண்ணப்பப்படிவங்கள் மட்டும் விண்ணப்பப்
* பத்திரத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பிந்திய விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். இராசதுரை (அதிபர்)

(C-3216)



## மருதா

பல வருடங்கள் பாவிக்கக்கூடிய கொம்பியூட்டர் பொலிமர் றபர் சீல்கள் செய்விப்பதற்கு

மருதா பொலிமர் றபர் சீல் தொழிலகம்

495, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

(450)



ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு



அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

(ச-2725)



நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

தனுஷ், சாயாசிங் நடித்த

திருடா திருடி

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

MEET THE PARENTS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

(ச-2723)



சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையில் 21/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு - 0777242198

(951)



## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### கள்ளியங்காடு சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2004

மாநகரசபைக்குச் சொந்தமான கள்ளியங்காடு சந்தையில் புதிதாக சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் - யாழ்.மாநரக ஆணையாளராகிய என்னால் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பணைப் பணம் ரூபா 10000/=, மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 1000/= உம் பெறுமதிசேர் வரி (Vat) ரூபா 150/= (15%) உம் செலுத்துவதன் பெயரில் 21.10.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 12.00 மணிவரையும் மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான விண்ணப்பப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் கேள்விப் பத்திரம் பெறவரும்போது, அவர்களுடைய தேசிய அடையாள அட்டையினைக் கொண்டுவருதல்வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்ட உறையிலிட்டு இடதுமேல் மூலையில் "கள்ளியங்காடு சந்தைக் கடை குத்தகை" எனக் குறிப்பிட்டு 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமூகமளிக்க முடியும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் சேர்ந்து செலுத்தல் வேண்டும்.

| கடைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர்வரி (Vat) தவிர்த்து) |
|---|---|
| 1. கீழ் தளக்கடைகள் (கடை ஒன்றுக்கு) | 360000/= |
| 2. முதலாம் மாடிக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180000/= |

ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி: 01.10.2004

(C-3217)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வடமராட்சியில் நேற்று திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் கடந்த 1996, 1997 ஆம் ஆண்டுகளில் படையினருடன் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஆறு மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

கடந்த 27.11.1996 அன்று பருத்தித்துறைப் பகுதியில் படையினருடனான நேரடி மோதலின்போது-வீரச்சாவடைந்த கடற்கரும்புலி கப்டன் வருணன் அல்லது கபில் (செல்வநாயகம் அருட்செல்வன் - பருத்தித்துறை), லெப்.நீலவண்ணன் அல்லது சரவணன் (சிறிபாலசுப்பிரமணியம் தமிழழகன் - நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறை).

கடந்த 30.09.1996 அன்று வடமராட்சிப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் இளஞ்செழியன் அல்லது சுபாஸ் (இந்திரன் ராஜ்மோகன், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), கப்டன் உதயராசா (அம்பிகைபாலன் ஜெயசீலன் - புலோலி மேற்கு பருத்தித்துறை).

கடந்த 16.12.1997 அன்று வடமராட்சிப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி லெப். கேணல் அருச்சுனா (இரத்தினம் வசந்தகுமார் - செல்வம் அரிசி ஆலை வீதி, உடுப்பிட்டி), கடற்புலி 2 ஆம் லெப்ரினன்ட் மகேந்திரம் (பாலசுந்தரம் சந்திரகுமார் - வல்வெட்டித்துறை).

ஆகிய ஆறு மாவீரர்களின் திருவுருவப்படங்களே நேற்றுக் காலை 10.30 மணியளவில் வடமராட்சி துயிலுமில்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன.

முன்னதாக இந்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வடமராட்சி துயிலுமில்லத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுச் சுடரினை ஏற்றினார்.

இதன்பின்னர் - இந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன், கடற்புலிகளின் வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் ஈகைச்சுடரேற்றி, திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்தனர்.

இதன்பின்னர் - வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழழகன் தலைமையில் நடைபெற்ற நினைவுரைகளில்,வீரவணக்க உரைகளை வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த தவயோகம், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கடற்புலிகள் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பாண்ட் வாத்திய இசையுடன் திருவுருவப் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டு திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் உலக சிறுவர் தின நிகழ்வு !

யாழ்.மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழக அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் யாழ்ப்பாண மாவட்டத்தினால் மிகச் சிறப்பாக உலக சிறுவர் தினம் நேற்று கொணடாடப்பட்டது.

இந்த நிகழ்வு நல்லை திருஞான சம்மந்தர் ஆதீன கலா மண்டபத்தில் முன்பள்ளி கல்விமேம்பாட்டுத் தலைவர் சி.சிவனேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முன்பாக யாழ்.மாவட்ட அனைத்து முன்பள்ளிகளினதும் ஆரம்ப பாடசாலை மாணவர்களினதும் ஊர்வலம் முன்பள்ளி சிறார்களின் பாண்ட் வாத்தியத்துடன் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகிக் கலா மண்டபத்தை வந்தடைந்தது.

முதல் நிகழ்வாக தமிழர் புனர்வாழ்வுக் கொடியை யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜும், முன்பள்ளிகளின் கொடியை அருட்சகோதரி பெல்சியானும், ஏற்றினர். தொடர்ந்து மங்கள விளக்கை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிஸாறா நவாஸ், நல்லூர் கல்விப் பணிப்பாளர் காங்கேசன், நீலகண்டன், அரசார்பற்ற இணையத் தலைவர் ஸ்ரீசக்திவேல், யாழ்.மாவட்ட முன்பள்ளி மக்கள் கூட்டமைப்புத் தலைவர் சிவராசா, மற்றும் முன்பள்ளி பிரதேச மட்ட சிறார்களாலும் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. உரைகளை வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, முஸ்லிம் சகோதரி நிராஸாநவாஸ், அருட்சகோதரி பெல்சியானா, மற்றும் பல பிரமுகர்களும் உரையாற்றினர்.

சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பளர் சி. இளம்பரிதி ஆற்றினர். அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துக்கு மாணவர்களினால் மகஜர் ஒன்று அரசசார்பற்ற இணையத் தலைவர் சக்திவேலிடம் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரபாகரனுக்கு அழைப்பாணை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எதிர்வரும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இதற்குமுன்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுப்பிவைத்த உத்தரவுப் பத்திரத்துக்கு அமைய அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அடுத்தமுறை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு விடுதலைப் புலிகளின் தலைவருக்கு அனுப்பும் உத்தரவுப் பத்திரத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் கையளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிபதி பி.விஜயரத்ன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச்செய்யுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு மனுக்களை நேற்றுப் பரிசீலித்த போதே மேன்முறையீட்டு நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த மனுக்களை ஜே.வி.பி., சிங்கள மக்கள் கட்சி, சிஹல உறுமய ஆகிய கட்சிகளும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களில் விடுதலைப் புலிகளின் தலைவர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# அம்பாறையில் முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து சந்திப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகள் விசாயச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக நாளை மறுதினம் முத்தரப்பு சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளும், சிவில் அதிகாரிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

வட்டமடு பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட காணி, கால்நடை, மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்டது என தமிழ் விவசாயிகளும், குறிப்பிட்ட காணிக்கான ஒப்பம் தங்களிடமிருப்பதாக சம்பந்தப்பட்ட முஸ்லிம் விவசாயிகள் கூறிவருவதையடுத்தே இந் தக் காணிப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை - இந்தக் காணி தொடர்பாக தீர்மானமொன்று எடுக்கும் பொருட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி அம்பாறை அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவொன்று அந்த இடத்துக்கு நேரில் சென்று இதுபற்றி ஆராயவுள்ளது.

# ஒரே நாளில் கடவுச்சீட்டு வழங்கும் நடைமுறை தொடர்ந்து அமுலில்!

(கொழும்பு)

ஒரேநாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜனதாஸ தெரிவித்தார்.

ஒரேநாளில் கடவுச்சீட்டு வழங்கும் முறையில் மோசடிகள் அதிகம் இடம்பெறுவதாகக் கருதி - ஒரே நாளில் கடவுச்சீட்டு வழங்கும் முறையை நேற்றுமுதல் நிறுத்துவதென அரசாங்கம் முடிவுசெய்திருந்தது.

எனினும், குறுகிய கால அடிப்படையில் இந்த நடைமுறை நிறுத்தப்படுவதால், பொதுமக்கள் அசெளகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதையடுத்தே இந்தத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தாமல் அடுத்த வருடம் ஆரம்பம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்து கட்டண மீண்டும் உயர்கிறது!

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கட்டணங்கள் நாளைமறுதினம் முதல் அதிகரிக்கப்படவுள்ளன.

அண்மைய காலங்களில் டீசல் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பைத் தொடர்ந்தே இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

புதிய கட்டணங்களுக்கு அமைய மிகக்குறைந்த போக்குவரத்துக் கட்டணம் 3.50 சதத்திலிருந்து 4 ரூபாவாக அதிகரிக்கபடவுள்ளது.

# ஒட்டுசுட்டான் விபத்துக்களில் இரு இளைஞர்கள் காயம்!

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் நேற்று இடம்பெற்ற இரு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்தனர். காயமடைந்த இருவரில் ஒருவா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேதவனம் இளசேந்தன் (வயது 19) என்ற இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றொரு விபத்தில் வித்தியாபுரத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிறி (வயது 24) என்பவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது கன்ரரில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மன்னார்..

கள் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் முகமாக இப்படி நடந்துகொள்கின்றன. இதுபற்றி உடனயாகப் பொலிஸாருக்கு முறையிட்டோம். இதன் பின்னர் - அந்தக் குழுக்கள் 15 நிமிடங்களால் கலைந்துசென்றனர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரபாவின்..

மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், தமிழீழ நீதி - நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சட்ட...

விளக்கவுரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து இடைக்கால தன்னாட்சி வரைபுபற்றி சாதக பாதக நிலைமைகள் பற்றியும், அடுத்த சட்ட நடவடிக்கை பற்றியும், ஆராயபட்டுக்கொண்டிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில் கலாநிதி அன்ரன பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், க.வே.பாலகுமாரன், பா.நடேசன், பரா, கி.கௌசல்யன், புலித்தேசன், தமிழ்விழி, திருமதி அடேல் பாலசிங்கம், உருத்திரகுமாரன், அன்ரன் பொன்ராசா, சாந்தன், பாஸ்கரன், நேமு குணரட்ணம், இரேனியஸ் செல்வின், கே.மகேஸ்வரன், சட்ட நிபுணர்களான சிவா பசுபதி, போல் டொமினிக், விஸ்வேந்திரன், தம்பியப்பா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இருவேறு சூட்டுச்...

சாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரான இவர் கிரான் கல்மடுவிலுள்ள அவரது வீட்டில் தங்கியிருந்த சமயம் சுடப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் கல்குடாப் பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - நேற்று மாலை ஆறு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 42 வயதான பூபாலப்பிள்ளை சிவப்பிரகாசம் என்ற வர்த்தகர் படுகாயமடைந்தார்.

பொலநறுவையில் இருந்து மட்டக்களப்புக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது - புனானைக்கும் வாழைசசேனைக்கும் இடையில் இந்த ஊர்தியை வழிமறித்த நான்கு ஆயுதபாணிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்ற குறிப்பிட்ட வர்த்தகர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

## புலிகளின் அரசியல்...

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், நீதி - நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பொறுப்பாளர் குலம் உட்பட தமிழீழ விடு தலைப் புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

இதன்பின்னர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்-அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்துரையாடலை நடத்தினர். தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்துக்கள், தகவல்களை சு.ப. தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரனும் நேற்றுமுன்தினமிரவு ஜெனீவா சென்று தாயகத்திலிருந்து சென்ற சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் இணைநது கொண்டார்.

## தமிழ் - முஸ்லிம்...

பதுர்தீன் என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி, தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் நாசகாரிகளின் குழுவொன்று, விடுதலைப் புலிகளின் பேசாலை மற்றும் மன்னார் அலுவலகங்களுக்கு முன்பாகக்கூடி வன்முறைகளில் ஈடுபட்டது.

இதன்போது புலிகளின் மூன்று அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டதோடு, மோட்டார் சைக்கிள்கள் உட்பட அங்கிருந்த உடைமைகளும் தீ வைக்கப்பட்டன. இதனையடுத்து, விடுதலைப் புலிகளின் அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பேசாலை - கரிசலைச் சேர்ந்த கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம், மோட்டார் சைக்கிளில் இவர்களைப் பின்தொடர்ந்தவர்களால் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை-இந்தச் சம்பவத்தையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தணிப்பதற்காக நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் படை அதிகாரிகள், சமூக-சமயப் பிரமுகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மன்னாரில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தொடர்பாக அவசர பாதுகாப்பு மாநாடு ஒன்றும் நேற்று நடைபெற்றது. தள்ளாடி இராணுவமுகாம் கட்டளை அதிகாரி மற்றும் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த பெத்தேவெல ஆகியோா தலைமையில் இந்த மாநாடு இடம்பெற்றது. இதேவேளை - மன்னாரில் இயல்புநிலை தோன்றும்வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமென வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (201)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.